வாராந்த மின்னிதழ்
உண்மையின் முகம்
கல்முனை NET
kalmunainet.com
e paper
தமிழ் மொழியினருக்கான தகவல் தளம்
சார்வரி வருடம் தை 25 (07.02.2021) இதழ் : 04




# கிழக்கு தொல்பொருள் செயலணி; சிறுபான்மையினர் புறக்கணிப்பு!

(நமது நிருபர்)

கிழக்கு தொல்பொருள் செயலணிக்கு சிறு பான்மையினரை புறக்கணித்து மேலும் 5 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு தொல்பொருள் ஜனாதிபதி செயலணியில் சிறுபான்மையினரையும் நியமிக்குமாறு தொடர்ச்சியாக கோரிக்கை முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் குறித்த செயலணிக்கு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மேலும் 5 பேரை அரசாங்கம் நியமித்துள்ளது.

02

## பல்வேறு தரப்பாலும் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் நிராகரிப்பு

## செயலணியின் புதிய பிரதி நிதிகளை பட்டியலிட்டது அரசு!

# இன்று வரை பேரணி நீடிப்பு



நமது நிருபர்

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான நீதிக்கான தொடர் போராட்ட பேரணி இன்று 7ஆம் திகதியன்று யாழ்ப்பாணத்தை வந்தடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

6ஆம் திகதியன்று யாழ்ப்பாணத்தில்

02

# கிழக்கில் 12 மணி நேரத்தில் 19 பேருக்கு கொரோனா!

## 16 கொரோனா மரணங்கள்; மொத்தம் 2547 தொற்றுக்கள்!

### கல்முனை 1256; மட்டக்களப்பு 619; திருமலை 484; அம்பாறை 165



(வேதசகா)

கிழக்கு மாகாணத்தில் 12மணி நேரத்தில் 19 பேருக்கு கொரோனா தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று (7) அம்பாற(4) திருக்கோவில் (3) ஏறாவுர் (2) சம்மாந்துறை கல்முனைவடக்கு பதியத்தலாவ ஆகியபிரதேசங்களில் தலா ஒருவருமாக என 13தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை கிழக்கில் 16வது மரணம் சம்பவித்துள்ளது. கல்முனைப்பிராந்தியத்தில் 8வது மரணம் இதுவாகும்.

02

## மக்களுக்கு மகிழ்ச்சிதரும் செய்தி

நமது நிருபர்

அத்தியாவசிய நுகர்வுப் பொருட்கள் 27ற்கான விலை திங்கட்கிழமையிலிருந்து குறைக்கப்படும். அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவின் ஆலோசனைக்கு அமைவாக வர்த்தக அமைச்சினால் இத்திட்டத்தை நடைமுறைப் படுத்துகின்றது.

இந்தத் திட்டம் 3 மாதங்கள் அமுலாக்கப்படும்.

இதன் மூலம் தரத்தில் சிறந்த அத்தியாவசியப் பொருட்களை சந்தையில் உள்ள மட்டத்தை விட குறைந்த விலைக்கு விநியோகிக்க முடியும் அமைச்சர்

இந்தத் திட்டத்தின் கீழ் அரிசி கோதுமை மா சீனி பருப்பு பெரிய வெங்காயம் உருளைக்கிழங்கு மிளகாய் ரின்மீன் சவர்க்காரம்

02



கொட்டும் மழையுடன் ஆரம்பித்த பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை பேரணி ...

## மாகாண சபை முறைமை அவசியமானது

### பிள்ளையான் கூறுகிறார்



நமது நிருபர்

சிறுபான்மை சமூகத்தவர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்ககே மாகாண சபை அதிகாரப்பகிர்வு அது பிரிவினையை நோக்கி நகராது என்ற

02

## பத்தாயிரம் பயிற்சிபட்டதாரிகள் அரச சேவைக்குள்..

நமது நிருபர்

2019ஆம் ஆண்டில் கடந்த அரசாங்கத்தின் காலத்தில் ஆட் சேர்ப்பு செய்யப் பட்ட பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பயிற்சி பட்டதாரிகளை இம்மாத இறுதிக்குள் அரச சேவையில் உள்வாங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

ஜனவரி மாத இறுதிக்குள் இந்த நியமனங்கள் வழங்குவதற்கு

02

## தோட்டத்தொழிலாளர் போராட்டம் வெற்றி

### முதலாளிமார் சம்மேளனம் திண்டாட்டம்!

நமது நிருபர்

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000 ரூபாய் சம்பள உயர்வை வலியுறுத்தி மலையகம் தழுவி வெள்ளியன்று [illegible] அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தால் முழு மலையகமும் முடங்கியது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் விடுத்த வேண்டுகோளின் பிரகாரம் மலையகத்தில் உள்ள பிரதான தொழிற்சங்கங்களும்

02

## பருத்தித்துறையில் தடை; யாழ்.நகரில் தடைநீக்கம்

நமது நிருபர்

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் கடந்த நான்கு நாட்களுக்கு ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பேரணிகளை நடத்த பொலிஸார் தடை உத்தரவு

02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி வலயம் இரண்டு வலயங்களாகின்றது!

## அமைச்சர் ஆளுநரிடம் அனுமதிக்கடிதம் வழங்கிவைப்பு

நமது நிருபர்.

கிளிநொச்சி வலயம் இரண்டு கல்வி வலயங்களாக பிரிக்கப்பட்டமைக்கான அனுமதிக்கடித்தினையையும் கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு ளஅயசவ உடயளளசழழஅ இற்கான கொரியநாட்டின் அன்பளிப்பான 5 மில்லியன் ரூபா பெறுமதியான உபகரணங்களுக்குரிய காசோலையையும் கல்வி அமைச்சர் வடமாகாண ஆளுநரிடம் கையளித்தார்.



வடமாகாணகல்வித்துறையில் காணப்படும் பிரச்சனைகள் தொடர்பாக ஆராயும் விசேட கலந்துரையாடல் கிளிநொச்சிமாவட்ட யாழ்பல்கலைக்கழக வளாகத்தில் கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையில் இடம்பெற்றது.

வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் வடமாகாணத்தில் கல்வி மற்றும் சுகாதாரதுறைகளில் பலவேறு பிரச்சனைகள் காணப்படுவதை குறிப்பிட்ட துறைசார் நிறுவனங்களுக்கு அவர் சென்றிருந்த போது அவதானித்ததாகவும் மேலும் சில பிரச்சனைகள் குறித்த துறைசார் திணைக்களத் தலைவர்களால் அறிக்கையிடப்பட்டதாகவும் தெரிவித்தார்.

அந்தவகையில் கல்வித்துறையில் அறிக்கையிடப்பட்ட பிரச்சனைகளை மாண்புமிகு பிரதம அமைச்சர் மூலமாக கல்வி அமைச்சருக்கு அறிக்கை இடப்பட்டதாக தெரிவித்தார். அவற்றில் குறிப்பாக கல்வி மற்றும் சுகாதாரதுறைகளில் ஆளணி பற்றாக்குறை காணப்படுவதாகவும் மற்றும் ஆசிரியர்களுக்கு கஷ்டப்பிரதேசங்களுக்கு சென்று வருவதற்கான பிரயாண வசதி குறைபாடுகள் காணப்படுவதாகவும் குறித்த கஷ்டப்பிரதேச பாடசாலை ஆசிரியர்களுக்கான விசேட சலுகை ஏற்பாடுகளை வரவுசெலவுதிட்டத்தினுள் வழங்க ஏற்பாடுகள் மேற்கொண்டால் சிறப்பாக அமையும் எனவும் இமாகாண பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக கொண்டுவருவதற்கு மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் தொடர்பாக மாவட்ட மட்ட அபிவிருத்தி கூட்டத்தில் கலந்து ஆலோசித்ததாகவும் தெரிவித்தார்.

---

# திருக்கோவில் அறுவடை விழாவில் அரச அதிபர்

(வேதசகா)



திருக்கோவில் பிரதேச செயலக பிரிவில் 170 ஏக்கர் முதன்முறையாக செய்யப்பட்ட நஞ்சற்ற நெல் உற்பத்தியின் அறுவடை நிகழ்வு நேற்று சேனைக்காடு விவசாய கண்டத்தில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அம்பாரை மாவட்ட அரச அதிபர் டி.எம்.எல்.பண்டாரநாயக்கா மற்றும் மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெகதீசன் ஆகியோர் பிரதம அதிதியாக கலந்து ஆரம்பித்து வைத்தனர்.

---

## பருத்தித்துறையில் தடை; யாழ்நகரில் தடைநீக்கம்

பெற்றுள்ளனர். பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் பருத்தித்துறை நெல்லியடி மற்றும் வல்வெட்டித்துறை பொலிஸார் தாக்கல் செய்த விண்ணப்பத்துக்கே இந்த தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

பொதுத் தொல்லையை ஏற்படுத்தல் கொரோனா சுகாதார நடைமுறைகளை மீறுதல் உள்ளிட்ட சட்ட ஏற்பாடுகளின் கீழ் இந்த விண்ணப்பங்கள் பொலிஸாரால் தனித்தனியே தாக்கல் செய்யப்பட்டன.

பொலிஸாரின் விண்ணப்பத்துக்கு மூத்த சட்டத்தரணி என்.சிறிகாந்தா தலைமையிலான சட்டத்தரணிகள் முன்னிலையாகி கடும் ஆட்சேபனையைத் தெரிவித்தனர்.

இருதரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் காயத்திரி சைலவன் பொலிஸாரின் விண்ணப்பத்தை ஏற்று தடை உத்தரவு வழங்கி கட்டளை வழங்கினார்.

இதேவேளை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் ஆர்ப்பாட்டங்கள் பேரணிகளை நடத்த வழங்கிய தடை உத்தரவை நீதிமன்றம் நீக்கம் செய்தது.

பொலிஸாரின் விண்ணப்பத்துக்கு ஒருமுக விளக்கத்தில் வழங்கிய கட்டளையை பிரதிவாதிகள் முன்வைத்த ஆட்சேபனையை அடுத்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் நீக்கியது.

---

## மாகாண சபை முறைமை அவசியமானது; பிள்ளையான் கூறுகிறார்....

நம்பிக்கையை சிங்கள மக்களுக்கு ஏற்படுத்துவதன் மூலமும் மக்கள் மயப்படுத்தப்பட்ட முறையானதிட்டங்களை முன்மொழிவதனால் மாத்திரமே மாகாண சபை முறைமை வெற்றியளிக்கும் என மட்டு.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அரசாங்கத்திடம் தொடர்ந்தும் முன்வைத்து வருவதாகவும் இந்த வருட இறுதிக்குள் மாகாணசபைத் தேர்தலை எதிர்பார்க்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டை நேசிக்கும் ஒவ்வொருவரும் நம்மோடு இணைந்து பணியாற்ற வருமாறு ஜனாதிபதி தனது சுதந்திர தின உரையில் அழைப்பு விடுத்துள்ளார். கிழக்கில் நானும் முதலமைச்சராக நான் இருந்தவர். இலங்கையைப் பெறுத்தவரையில் மாகாணசபை முறைமைதான் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொன்றாகும். இது சட்டமாக்கப்பட்டுள்ளது.

## தோட்டத்தொழிலாளர் போராட்டம் வெற்றி...

ஏனைய துறையினரும் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்திருந்தன.

மலையகப் பகுதிகளில் அனைத்துச் செயற்பாடுகளும் முடங்கின. பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் பஸ் போக்குவரத்தும் இடம்பெறவில்லை. அனைத்து தோட்டப்பகுதிகளிலும் பணிகள் முற்றாக நிறுத்தப்பப்பட்டுள்ளதுடன் எந்தவொரு தொழிற்சாலையும் இயங்கவில்லை.

நாளை 8ஆம் திகதி சம்பள நிர்ணய சபையில் இடம்பெறவுள்ள பேச்சுவார்த்தைக்கு அழுத்தம் சேர்க்கும் வகையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

**போராட்டம் வெற்றி!**

அடையாள வேலை நிறுத்த போராட்டம் மூலம் மக்கள் தமது ஒற்றுமையை வெளிப்படுத்தியுள்ளனர். அது வெற்றியளித்துள்ளது என இலங்கை தொழிலாளர் காங்ரஸின் பொதுச்செயலாளரும் வீடமைப்பு மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

எமக்கு ஜனாதிபதி அவர்களின் மீது நம்பிக்கையுள்ளது நிச்சயமாக எமது பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் சம்பளத்தை பெற்று கொடுப்பார். இன்றய தினம் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டமானது அரசாங்கத்திற்கு எதிரானஆர்ப்பாட்டமல்ல பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டமாகும்.

---

## பத்தாயிரம் பயிற்சிபட்டதாரிகள் அரச சேவைக்குள்..

அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தாலும் அதிகாரிகள் சிலருக்கு கொவிட் வைரஸ் தொற்று ஏற்பட்டமையின் காரணமாக அமைச்சின் சில பிரிவுகளை தற்காலிகமாக மூடப்பட வேண்டியிருந்தது. இதன் விளைவாக நியமனங்கள் வழங்கும் பணி தாமதமாகிவிட்டதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

---

# கிழக்கில் கடந்த 12 மணி நேரத்தில் 19 பேருக்கு கொரோனா!....

கிழக்கு மாகாணத்தில் கொரோனாத்தொற்றுக்களின் எண்ணிக்கை 2500ஐ தாண்டியுள்ளது. அங்கு நேற்றையதினம் (06) சனிக்கிழமை 2547 ஆகியது.

அதேவேளை கல்முனைப்பிராந்தியம் 1250 ஐத் தாண்டி 1256ஆகியது.

கல்முனைப்பிராந்தியத்துள் வரும் அக்கரைப்பற்று பிரதானசந்தை மூலமாக ஏற்பட்ட உபகொத்தணிப்பரவலும்; 1100த்தாண்டியது. அந்த உப கொத்தணியில் இதுவரை 1199பேர் இனங்;காணப்பட்டுள்ளனர்.

கடந்த மார்ச் மாதமிருந்து பேலியகொட மூலமாக இதுவரை கல்முனை பிராந்தியத்தில் 1256பேரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 619பேரும் திருமலை மாவட்டத்தில் 484 பேரும் அம்பாறை பிராந்தியத்தில் 165பேருமாக 2524 பேர் தொற்றுக்கிலக்காகியுள்ளனர்.

மேலும் வெளிநாடு மினுவாங்கொட கந்தக்காடு கொத்தணி வெலிசற கடற்படைமுகாம் போன்ற மூலங்களிலிருந்து மீதி 23 தொற்றுக்கள் இனங்காணப்பட்டுள்ளன.

**16மரணங்கள்!**

இதுவரை கிழக்கில் சம்மாந்துறை ஒலுவில் சாய்ந்தமருது அட்டாளைச்சேனை வவுணதீவு காத்தான்குடி நாவிதன்வெளி ஆலையடிவேம்பு உகனை காத்தான்குடி மற்றும் மட்டக்களப்பிலுமாக மொத்தம் 16 கொரோனா மரணங்கள் சம்பவித்திருக்கின்றன.

அதிகூடிய 04மரணங்கள் சாய்ந்தமருதில் சம்பவித்துள்ளது.

கல்முனைப்பிராந்தியத்தில் 08பேரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 06பேரும் அம்பாறைப்பிராந்தியத்தில் இருவருமாக இந்த 16 மரணங்கள் சம்பவித்திருக்கின்றன.

இத்தரவுகளை கிழக்குமாகாண சுகாதாரத்திணைக்களம் வெளியிட்டுள்ளது

---

## மக்களுக்கு மகிழ்ச்சிதரும் செய்தி...

செனிடைஸர் முகக்கவசம் உள்ளிட்ட 27 வகை பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

லங்கா சதொச கூட்டுறவு நிலையங்கள் கியுசொப் விற்பனையகங்கள் ஊடாக நிவாரணப் பொதியைக் கொள்வனவு செய்ய முடியும்.

---

## இன்று வரை பேரணி நீடிப்பு...

வைத்து பேரணியை முடிக்கத் திட்டமிடப்பட்டிருந்த நிலையில் யாழ்ப்பாணம் மன்னார் வவுனியா உள்ளிட்ட பகுதிகளில் 6ஆம் திகதி வரை போராட்டங்களை நடத்த நீதிமன்றங்களின் மூலம் தடைவிதிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து தற்போது மேலும் ஒரு நாள் தாமதமாகவே யாழ்ப்பாணத்தை போராட்டம் வந்தடையுமென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

---

# கிழக்கு தொல்பொருள் செயலணி; சிறுபான்மையினர் புறக்கணிப்பு!

புத்தசாசன அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன, தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் மூத்த பேராசிரியர் அனுர மானதுங்க ,காணி ஆணையர்

நாயகம் கீர்த்தி கமகே ,சிவில் பாதுகாப்பு திணைக்கள பணிப்பாளர் மேஜர் ஜெனரல் ஆர்.டி.நந்தன சேனதீர மற்றும் கிழக்கு மாகாண காணி ஆணையாளர் அசிங்சல சேனவிரத்ன ஆகியோரே நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதாவது இந்த செயலணியில் அங்கம் வகித்த ஐந்து உறுப்பினர்களில் சிலர் ஓய்வுபெற்றமை மற்றும் இடமாற்றம் பெற்றதால் புதிய நியமனங்கள் நடைமுறைக்கு வருவதாக வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தின் தொல்பொருள் ஜனாதிபதி செயலணி கடந்த 2020 ஜூன் 1ஆம் திகதி ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டது. இதில் தமிழ் மற்றும் முஸ்லிம்களை இணைக்கும்படி பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. இருப்பினும் அது கவனத்திற்கொள்ளப்படாதமை தொடர்பில் சிறுபான்மைக்கட்சிகள் கவலைதெரிவித்துள்ளன.

இதனால் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா மற்றும் எஸ்.வியாழேந்திரன் ஆகியோர் பெயர் பட்டியலொன்றினை சமர்ப்பித்திருந்தனர். அந்த பட்டியல் குறித்து அரசாங்கம் இதுவரை கவனம் செலுத்தவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்முனை NET kalmunainet.com e paper

2021ஜனவரி 24 ஞாயிறு
கல்முனைநெற் ஊடக வலையமைப்பு
பிரதானவீதி பாண்டிருப்பு, கல்முனை
T.P.:0776965343, 0762933026, 0773457915
E.Mail: kalmunainet@gmail.com, ceditorsaga@gmail.com
சிந்தனைக்கு விருந்து

**வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல**

# பேரினவாத நிகழ்ச்சி நிரல்

**சாத்வீக** போராட்டங்கள் தோல்வி கண்டதால் தான் 30 வருடங்கள் பேரழிவை சந்தித்தோம். பெரு வெற்றி பெற்ற அரசும் பேரினவாதமும் இன்னும் இதனை புரிந்து கொண்டதாக இல்லை.

ஆயுதப் போராட்டம் ஒன்றை துடைத்தெறிந்த மமதையில் இன்னும் யதார்த்தம் புரியாமல் இருக்கிறார்கள். ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக கொடுத்த இனவாத வாக்குறுதிகளை நிறைவேற்ற எடுக்கப்படும் கபடத்தனம் தமிழர்களையும் முஸ்லிம் களையும் ஆத்திரம் ஊட்டுவதாக இருக்கிறது.

வடக்கு,கிழக்கில் கடந்த நான்கு நாட்களாக அமைதிப் பேரணி வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. பொத்துவிலில் பொலிகண்டி வரையும் நடைபெற்ற இந்த அமைதிப் பேரணிக்கு எதிராக போலீசார் தடை உத்தரவு பெற்றிருந்தனர். இருந்தாலும்,அது வெற்றிகரமாக நடந்தேறி இருக்கிறது.

வடக்குஇகிழக்கில் நிலங்கள் ஆக்கிரமிப்புஇ மத அடையாளங்கள் அழிப்புஇ

தொல்லியல் நினைவுச் சின்னங்கள் அழிப்புஇ தமிழ் மொழி புறக்கணிப்புஇ பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும்........ உட்பட பல்வேறு கோரிக் கைகளை முன்வைத்தே இந்த அமைதிப் பேரணி நடத்தப்பட்டிருக்கிறது.

சிவில் அமைப்புக்களும் தமிழ் அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த இந்த பேரணிக்கு முஸ்லிம்களும் பேராதரவு வழங்கினர்.

கொட்டும் மழைக்குள் பொத்துவிலில் இருந்து ஆரம்பித்த பேரணி அட்டாளைச்சே னை அடைந்ததும் பெரும் திரளான முஸ்லிம்கள் பேரணியில் இணைந்து கோஷங் களை எழுப்பினர்.முஸ்லீம்களின் பங்கேற்பு ஓர் அரசியல் திருப்புமுனை ஆகவே பார்க்க முடிகின்றது. படையினர் போலீசார் ஆங்காங்கே பேரணியை தடுக்க முற்பட்ட போதிலும் கோஷங்களை எழுப்பியவாறு பேரணி உத்வேகம் பெற்றுக் கொண்டே சென்றது. இருந்தாலும்,பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த போலீசாருக்கு ச ங்கடங்கள் ஏற்பட்டிருந்த போதிலும்இஅவர்கள் மிகவும் கண்ணியமாக நடந்து கொண்டார்கள்

என்பதை பாராட்டியே ஆகவேண்டும்.

உண்மையில், வடக்கு,கிழக்கில் ஏராளமான இந்து ஆலயங்கள் அழிக்கப்பட்டு இருப்பதாக அரசியல் கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன. வடக்கில் குரும்பூர் அய் யனார் கோயில், கிழக்கில் கன்னியா பிள்ளையார் கோயில்இ குசனார் முருகன் கோயில் உட்பட பல ஆலயங்கள் அழிக்கப்பட்டு இருப்பது இந்துக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியையும் குமுறலையும் ஏற்படுத்தியிருக்கிறது.

இவைகளை விடவும்,தொல்பொருள் இடங்களாக பல பிரதேசங்கள் குறிப்பி டப்பட்டுள்ளதோடு அங்கு வசிப்பவர்களின் வாழ்விடங்கள் பறிபோகும் நிலையும் இருக்கிறது.

தொல்லியல் திணைக்களம். நில அளவை திணைக்களம். மஹாவலி அதிகார சபைஇவனவள திணைக்களம் இவைகள் அனைத்தும் அரசாங்க இயந்திரங்கள். இவற்றின் செயல்பாடுகளை பார்க்கின்றபோது பேரினவாதிகளின் மறைமுக நிகழ்ச்சி நிரல்களின் கீழ் செயல்படுகின்றன என்ற சந்தேகம் எழாமல் இல்லை.

அரசாங்கம் தனது கொள்கைகளையும் செயல்திட்டங்களையும் நடைமுறைப் படுத்த வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் இனங்களின் உணர்வுகளை தூண்டும் வகையில் செயல்படுவதை ஏற்றுக்கொள்ளவே முடியாது. தொழில் திணைக்களத்தின் நடவடிக்கைகளில் மக்கள் மத்தியில் பெரும் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.மக்கள் காலம் காலமாக வாழும் பிரதேசங்களையும் விளைநிலங்க ளையும் தொல்லை கொடுத்து அரசாங்கம் ஆக்கிரமிப்பு செய்யும் நடவடிக்கையா னது பேரினவாதத்தின் மறைமுகமான நிகழ்ச்சிநிரல் ஆகவே பார்க்க முடிகின்றது நாட்டின் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி என்ற பெயரில் இதையும் செய்யலாம் என்று நினைத்து செயல்படுவது ஆரோக்கியமானதல்ல.

தொல்லியல் திணைக்களம் சிவப்பு வட்டமிடும் பிரதேசத்தினுள் இந்து ஆல யங்களும் அல்லது பள்ளிவாசல்களும் அல்லது கிறிஸ்தவ தேவாலயங்களும் இருந்தால் அழிக்காமல் பேணுவதில் என்ன குறைந்து விடப் போகிறது.?தேன் கூடுகளுக்கு கல்லெறிந்து விட்டு வேடிக்கை பார்க்கும் சம்பவங்கள் தான் இப்போது நடந்து கொண்டிருக்கின்றன. சிறுபான்மை மக்களின் கோஷங்களுக்கும் உணர் வுகளுக்கும் மதிப்பளிக்க பட்டதாக தெரியவில்லை.

அதிகாரிகளிடம் கேட்டால் தெரியாது என்கிறார்கள் ;ஆளுநரிடம் கேட்டால் அதுதான் சட்டம் ஒன்றும் செய்ய முடியாது என்கிறார் ;அரசின் கவனத்துக்கு கொண் டுவந்தால் பார்க்கிறோம் என்கின்றனர். இதைவிட யாரிடம் சொல்வது.? எல்லாமே மறைமுக நிகழ்ச்சி நிரல் என்பது ஊர்ஜிதமாகிறது.

ஜெனிவா மனித உரிமைப் பேரவை அமர்வை மையப்படுத்தியே பேரணிகளும் ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்படுவதாக அரசு லேசாகச் சொல்லிவிடலாம். ஆனால்இசி றுபான்மை மக்களின் உணர்வுகளையும் ஆழத்தையும் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்னும் ஒரு கவலை தரும் விடயத்தையும் நாம் சுட்டிக்காட்ட வேண்டும்.சுதந்திர தின வைபவத்தில் தமிழில் தேசிய கீதம் பாடப்படவில்லை. எதிர்பார்த்த ஒன்று தான்.இலங்கை சுதந்திரம் அடைந்த போதும் தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டது.1949 ஆம் ஆண்டு நடந்த தேசிய தின வைப்பவத்துக்கான அழைப்பிதழில் தமிழில் தேசிய கீதம் பாடப்படும் என்று அச்சிடப்பட்டுள்ளது. காலம் காலமாக பின்பற்றப்படும் இந்த நடைமுறையை

மாற்றியுள்ள இந்த அரசு,புதிய வியாக்கியானம் கூறி தமிழில் பாடுவதை நிறுத்தி உள்ளது. ஒரு சில நாடுகளில் ஒரே மொழியில் பாடப்படுகிறது என்பதற்காகஇஅ தனை இலங்கையிலும் திணிக்க முயல்வது தமிழ் பேசும் சமூகத்தை புறக்கணித்து சி ங்கள மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதற்கான நடவடிக்கை என்பது தெளிவாகிறது.

ஆகவே,இந்த நாட்டை பூர்வீகமாக கொண்ட சிறுபான்மை இனங்களை புறந் தள்ளி எடுக்கப்படும் எந்த ஒரு நடவடிக்கையும் நாட்டின் வளர்ச்சிக்கு குந்தகமாகவே இருக்கும் என்பதை பேரினவாதக் கட்சிகளும் ஆட்சியாளர்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

# தமிழ் மேய்ப்பர்கள் ஆவார்களா?

**இசைப்பிரியன்**

**ஒரு** வருடத்துக்கு முன்னர் தாயகசெயற்பாட்டாளர் ஒருவருக்கு, புலம்பெயர் தேசத்திலிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது.‘சுவிஸ் அரசாங்கம் ஆயிரக்கணக்கான இலங்கைத் தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்களை நாட்டுக்குத் திருப்பி அனுப்ப போகிறது. ஆகவே அவர்களுக்கு சிறீலங்கா அரசால் உயிர் அச்சுறுத்தல் உண்டு என்றும், திருப்பி அனுப்ப வேண்டாம் என்றும் வலி



யுறுத்தி, வவுனியாவில் ஏ9 சாலை ஓரத்தில்,1000 நாட்களைக் கடந்தும் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு நீதிகேட்டு போராடிக் கொண்டிருக்கும் தாய்மார்கள் தமது போராட்டப் பந்தலுக்கு முன்பாகஒரு கவனயீர்ப்பு போராட்டத்தை நடத்த முடியுமா?’ இப்படி அந்த தொலைபேசி அழைப்பில் கேட்கப்பட்டது.

அதற்கு தாயக செயற்பாட்டாளர்,அங்கிருக்கும் இந்த ஆயிரக் கணக்கான பேரும் இவ்வளவு நாளும் யாருக்கு பணம் அனுப்பி வைத்தீர்கள்? அறுபதைக் கடந்த வயதிலும் முதுமைக் கால நோய்களோடு மழையிலும் வெயிலிலும் போராடிக் கொண்டிருக்கிற இந்த தாய்மார்களுக்கா? இல்லையே, உங்கள் மனைவி, பிள்ளைகள், பெற்றோர், உறவுகளுக்கு தானே அனுப்பிக் கொண்டிருந்தீர்கள். இந்த ஆயிரக்கணக்கான குடும்பங்களும் ஒரு சில பேருந்துகளில் புறப்பட்டுச் சென்று கொழும்பில் சுவிஸ் தூதுவராலயத்துக்கு முன்பாக ஒரு கவனயீர்ப்பு போராட்டத்தை ஏன் நடத்தக் கூடாது? அது தானே ஒரு பெருந்திரளான மக்கள் போராட்டமாக இருக்க முடியும்? மறுநாள் கொழும்பு ஊடகங்களிலும் அது பேசப்படும் ஒரு பெரிய செய்தியாக இடம்பிடிக்குமே? நீங்கள் எதிர்பார்க்கும் அரசியல் விளைவும் கிடைத்து விடுமே?’என்று கேட்டதற்கு அவரிடம் இசைவான பதில்கள் எவையும் இருக்கவில்லை. அவர் தொலைபேசி அழைப்பை துண்டித்து விட்டார். இதுதான் துயரம்.

தாயகத்தில் எதுநடந்தாலும், அதற்கு ஆதரவாகவோ எதிராகவோ ஒரு சிறுதிரள் மக்களே தொடர்ந்தும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். போருக்குப் பின்னர் கடந்த பத்தாண்டுகளாக நடைபெற்ற போராட்டங்களில் பார்த்த முகங்களையே இப்போதும் கூட,திரும்பத் திரும்ப போராட்ட இடங்களிலோ, அது தொடர்பான செய்திகளை வெளியிடும் ஊடகங்களிலோ பார்க்க கிடைக்கிறது.போராட்டத்தில் கலந்து கொண்டிருப்பவர்களின் எண்ணிக்கையை விடவும், அதனை விடுப்பு பார்க்கும் மக்களின் தொகையே அதிகமாக இருக்கிறது. விடுப்பு பார்க்கும் பெருந்திரள் மக்கள் கூட்டம், ‘யாருக்கு என்ன நடந்தாலும், பரவாயில்லை. தமக்கு ஒரு பொல்லாப்பும் இல்லை. தாம் உண்டு, தம் குடும்பம் உண்டு, தம் தொழில் உண்டு, தம் பொழுதுபோக்கு உண்டு’ என்றவாறே விடுப்பு பார்த்துக் கடந்து போய்க் கொண்டிருக்கிறது.

விடுப்பு பார்க்கும் இந்தமக்கள், தாங்களும் இந்த சமூகத்துக்குள் தான் ஒரு அங்கமாக இருக்கிறோம், தங்களையும் பாதிப்புக்கு உள்ளாக்கும் ஒரு பொதுப் பிரச்சினைக்கு தீர்வு கேட்டு தான் குறிப்பிட்ட ஒரு பகுதி மக்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்று கருத தவறி விடுகிறார்கள். அதாவது தமக்கும் சேர்த்து தான் அவர்கள் நீதி கேட்கிறார்கள், நிவாரணம் கேட்கிறார்கள், இழப்பீடு கேட்கிறார்கள் என்கிற சிந்தனை சிறிதளவும் இல்லாமல் இருக்கிறார்கள். அதற்கும் மேலாக தங்களுடைய தனிப்பட்ட பிரச்சினைகளுக்கும் கூட, ‘போராடிக் கொண்டிருக்கும் இந்த ஒரு பகுதி மக்களே போராடித் தரவேண்டும்’ என்றும் எதிர்பார்க்கிறார்கள். இது என்ன வகையான மனோநிலை?

சமூகத்தின் பொதுப்பிரச்சினை ஒன்றுக்காக பொதுவெளியில் முகம் காட்டி போராட்டங்களை நடத்தினால், இராணுவ புலனாய்வு பிரிவினரால் அடையாளப்படுத்தப்பட்டு அவர்களின் தொடர்ச்சியான கண்காணிப்புக்கு உள்ளாக



வேண்டி வரும். மானியங்கள் இலவசங்கள் சலுகைகள் வழங்கப்படும் போது அரசால் பழி வாங்கப்படுவோம். அரசியல்வாதிகளாலும் அரச அதிகாரிகளாலும் வஞ்சிக்கப்படுவோம். இப்படி வெறுமனே சுயநலமாக மட்டுமே சிந்தித்து வயிறு வளர்க்கும் ஒரு கொடிய மனோநிலை பெருந்திரள் மக்கள் கூட்டத்திடம் இருக்கிறது.

சமூக அநீதிக்கு எதிராக கிளர்ந்து போராடினால் ‘ஐயோ... வேலை பறி போய் விடும்.கடினமான தூரப் பிரதேசத்துக்கு பணி இடமாற்றம் வரும்’ என்று கூளைக் கும்பிடு போடுகிற ஒரு கோழை மனோநிலை கற்றறிந்த அறிவுச் சமூகமான அரசாங்க உத்தியோகத்தர்களிடம் இருக்கிறது. அப்படியாயின் போராடிக் கொண்டிருக்கிற சிறுதிரள் மக்கள் மட்டும் என்ன வேற்றுக் கிரகவாசிகளா? இவர்களுக்கு என்று குடும்பம் இல்லையா? இவர்களுக்கு மட்டும் இந்தப் பிரச்சினைகள் எல்லாம் வராதா? அரசாலோ, அரச அதிகாரிகளாலோ நெருக்கடிகள் கொடுக்கப்படாதா?

இயற்கை அனர்த்தங்களின் போதும் இதுதான் நிலைமை. பண பலமோ, அரசியல் பலமோ கொண்டுள்ள யாராவது ஒரு பிரபலம் குளத்தை ஆக்கிரமித்தோ, வெள்ளநீர் வழிந்தோடும் வடிகாலை மூடியோ அடுக்குமாடி வீடுகளையோ, கடைத் தொகுதிகளையோ எழுப்பிக் கொண்டிருந்தால், அப்போதும் இந்த பெருந்திரள் மக்கள் கூட்டம் சுற்றுச்சூழல் பற்றிய எவ்வித அக்கறையும், எச்சரிக்கை உணர்வும் இன்றி, வேடிக்கை பார்த்து கடந்து போனது. கடந்து போய்க் கொண்டிருக்கிறது. குறித்த அநியாயம், அக்கிரமத்துக்கு எதிராக அறச்சீற்றம் கொண்டு பொதுவெளிக்கு வந்து போராடி அதை தடுத்து நிறுத்த மாட்டார்கள். ஆனால் பெரும் மழைக்கு பின்னர் போடும் வெள்ளம் ஒரு கிராமத்தையோ, ஒரு நகரத்தையோ முழுவதுமாகத் தான் மூழ்கடிக்கும். அந்த வெள்ளத்துக்கான காரணிகளுக்கு எதிராக போராடிய சிறுதிரள் மக்கள் யார்? போராடாத பெருந்திரள் மக்கள் யார்? என்றெல்லாம் பார்க்கத் தெரியாது. ஆகவே பிரச்சினைகளை கண்டு சுயநலமாகமட்டுமே சிந்தித்து, ஒதுங்கிக் கடந்து போவதால் பெருத்ததுன்பத்தில் உழல நேர்கிறது. வேடிக்கை பார்க்கும் பெருந்திரள் மக்கள் இயற்கைஅனர்த்தங்களிலிருந்து பாடங்களை கற்றுக் கொள்ள வேண்டும்.

சமூக அநீதிக்கு எதிராக கூர்மையான விதத்தில் எதிர்ப்புகளைக் காட்டி போராடினால் தான், ‘உண்டு வளமான வாழ்வு’ என்பதனை உணரத் தலைப்பட வேண்டும்.தமிழ் அரசியல் தலைமைகள் கூட, மக்கள் சந்திக்கும் உரிமை மறுப்பு பிரச்சினைகளில் சவாலானவற்றை கையிலெடுத்து ஒரு தலைமைத்துவத்தை கொடுக்கத் தயங்குகிறார்கள். ‘அரசியல் பெறுமானம் கொண்டிருக்கும் பிரச்சினைகளுக்கு அரசியல் ரீதியாகவே தீர்வுகளை பெற்றுக் கொடுக்க’ பின் நிற்கும் ஒரு நிலைமையே காணப்படுகின்றது. அதாவது இவர்கள் தமக்கு நோகாத, வலிக்காத பிரச்சினைகளை கையாள்வதில் மட்டும் தான் நீயா, நானா என்று போட்டிப் போட்டு முந்திக் கொண்டு செயற்பட வரிசை கட்டி நிற்கிறார்கள். தேர்தல் மையமாகவே சிந்தித்து

12 ஆம் பக்கம் பார்க்க...

கல்முனைநெற் மின்னிதழ் ஆசிரியபீடம்
பிரதம ஆசிரியர்: வி.ரி.சகாதேவராஜா,
இணை ஆசிரியர்: பு.கேதீஸ், ஆலோசகர்: க.குணராசா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சமையல் செய்ய வருகின்றது ரோபோ






**இதுவரை** நமக்கு அறிமுகமான சமையல் செய்யும் ரோபோக்கள் எல்லாம் வெறும் உதவியாளர் வகைகள் தான். இவைகள் பெரும்பாலும் தேனீர் குடிபானங்களை கலந்து தரும் அளவுக்குதான் அவற்றுக்கு அறிவு உண்டு. ஆனால், பிரித்தானியாவைச் சேர்ந்த, 'மோலி' என்ற ரோபோ வித்தியாசமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆறு ஆண்டுகளுக்கு முன், உணவகங்களுக்கான ரோபோவாக மோலியை உருவாக்கி வருவதாக அதன் படைப்பாளிகள் அறிவித்தனர்.

தற்போது, ஒரு குடும்பத்திற்கு தேவையான சமையல்களை செய்யும் திறனுடன், வீடுகளுக்கு செல்ல மோலி தயாராகியிருப்பதாக, 'மோலி ரோபோடிக்ஸ்' நிறுவனம் அறிவித்துள்ளது. மோலிக்காகவே சமையல் அறை உருவாக்கப்படும். அந்த சமையலறையின் மோலியின் ஆக்டோபஸ் போன்ற ரோபோ கரங்கள் பொருத்தப்படும். அந்தக் கரங்கள் இடமும், வலமுமாக வேகமாக நகருவதோடு, நாலா பக்கமும் வசதிக்கேற்ப அசையும் திறன் கொண்டவை.

மோலியின் செயற்கை நுண்ணறிவு மூளை, கமரா வழியேயும், அதன் விரல்களில் உள்ள உணரிகள் வழியாகவும் உணர்ந்து, உரிய இடத்தில் வைத்துள்ள பாத்திரங்கள், கரண்டிகள், உணவுப் பொருட்களை கையாளும் திறன் கொண்டது. அனுபவம் மிக்க சமையல் கலைஞர்கள் சமைப்பதை முப்பரிமாண கமரா மூலம் பார்த்து, அதேபோன்று உடல் அசைவுகள், கை மற்றும் விரல் அசைவுகளை பின்பற்றி மோலியால் சுவையாகவும் பதமாகவும் சமையலை செய்ய முடியும். விரைவில், 5 ஆயிரம் வகை உணவுகளை மோலி சமைக்கக் கற்றுக் கொள்ளும் என, மோலி ரோபோடிக்சின் ஆராய்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

இவ்வளவு வசதியும் கேட்க மகிழ்ச்சியாகவுள்ளது இதனை வாங்க வேண்டுமாக இருந்தால் அதன் விலை தெரியவேண்டுமே சரி, வீட்டு சமையல்கார மோலி ரோபோவின் விலை என்ன தெரியுமா? சுமார் எட்டு கோடி ரூபாய்.

# உடல், உள நலம் தரும் சக்கரங்கள்



(சென்ற வாரத் தொடர்ச்சி...)

**முதலில்** மூலாதாரச்சக்கரம் [மூல ஆதார சக்கரம்]. இது பிறப்புறுப்புக்கும் ஆசன வாய்க்கும் இடையில் அமைந்து காணப்படுகின்றது. அதாவது முதுகுத் தண்டின் அடிப்பகுதி. இச் சக்கரத்தில் மனதைச் செலுத்தி 'லங்' என்னும் மந்திரத்தை குறிப்பிட்ட தடவைகள் உச்சரிக்கும் போது உயிர் ஆற்றல் பெருகும். தசைகள், எலும்புகள், உள்ளுறுப்புகள் பலமடையும். பாலியல் உறுப்புக்கு வீரியத்தைக் கொடுக்கும். அடுத்து சுவாதிஷ்டான சக்கரம். இச் சக்கரமானது பிறப்புறுப்புக்கு மேல் தொப்புளுக்கு கீழ் அமைந்து காணப்படுகின்றது. இதற்குரிய மந்திரமாக 'வங்' உச்சரிக்கப்படுகிறது.

இச் சக்கரம் நுண்ணுணர்வினை அதிகரிக்கச் செய்வதோடு சிறுநீர்ப்பை, பிறப்புறுப்பு போன்றவற்றையும் வீரியம் அடையச் செய்து சுயகட்டுப்பாடு திறனை மேலும் வளர்ச்சி அடையச் செய்யும். அடுத்து மணிபூரகச் சக்கரம் தொப்புளில் அமைந்திருக்கும் சக்கரம் சிறுகுடல் பெருங்குடல் கல்லீரல் மண்ணீரல் போன்ற உறுப்புகளுக்குப் பலம் அளிப்பதுடன் அதன் செயல்பாட்டையும் சீர்படுத்தும் எப்பொழுதும் ஆனந்தமாக இருக்கச் செய்யும். இதற்குரிய மந்திரம் 'ரங்'.அடுத்து மார்பு பகுதியின் நடுப் பகுதியில் காணப்படும் சக்கரம் அநாகதம் என அழைக்கப்படுகிறது. இச்சக்கரம் இயங்குகின்ற பொழுது அன்பு கருணை பாசம் சகிப்புத் தன்மை அதிகரிக்கும் நுரையீரல் இதயம் சம்பந்தப்பட்ட நோய்கள் தீரும் விரும்பியதை விரும்பியவாறு பெற்றிட இச்சக்கரம் பெரிதும் உதவும். இச் சக்கரத்தை சிறப்பாக இயக்க 'யங்' என்னும் மந்திரம் பயன்படுத்தப்படுகிறது.






மார்புக்கு அடுத்தபடியாக தொண்டையில் காணப்படும் சக்கரம் தான் விசுத்தி. இச் சக்கரம் தொண்டை சம்பந்தமான நோய்கள் வராமல் தடுக்கும். தைராய்டு, பராதைராய்டு ஆகிய சுரப்பிகளின் முறையான இயக்கத்துக்கும் காரணமாக அமைகின்றது.

இதற்கான மந்திரமாக 'ஹங்' காணப்படுகிறது. இம்மந்திரத்தை சிலர் 'ஹம்' எனவும் உச்சரிப்பர். அடுத்து எமது உடலில் தலைமைச் சக்கரமாக காணப்படும் ஆக்ஞா சக்கரம் புருவ மத்தியில் காணப்படுகிறது.

இச்சக்கரத்தின் மீது மனதைச் செலுத்துபவன் தனது தியான வலிமைக்கேற்ப ஜீவன் முக்தன் ஆவதாக கூறப்படுகின்றது. 'ஓம்' என்பதே பீஜாட்சர மந்திரமாகக் கருதப்படுகின்றது. அதிகமான யோகிகளும் ஞானிகளும் இம்மந்திரத்தின் மீதுதான் கூடுதலாக மனத்தைச் செலுத்தி தியானம் செய்கின்றனர் இச் சக்கரத்தின் முறைப்படியான இயக்கம் நாளமில்லாச் சுரப்பிகள், பிட்யூட்டரி சுரப்பி ஆகியவற்றை இயக்குவதோடு மனதினை ஒருமுகப்படுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தி ஞாபக சக்தியையும் மேம்படுத்தும். எமது உடலுக்கு பிராண தெய்வீக சக்திகளின் நுழைவாயிலாக காணப்படும் சக்கரம் எமது உச்சந்தலையில் அமைந்துள்ள சகஸ்ராரம் ஆகும். மூளை மற்றும் பீனியல் சுரப்பி களின் செயல்பாட்டுக்கு முக்கிய காரணியாக செயற்படும் இச் சக்கரம் முழு உடலுக்கும் சக்தியைக் கூட்டக் கூடியதாக திகழ்கின்றது.

இச்சக்கரத்தில் மனதினைச் செலுத்திச் தியானம் செய்யும் போது பிரபஞ்ச சக்தி மற்றும் தெய்வீக சக்தி எம்மில் நுழைவதனை அவதானிக்கலாம். இந்த இடத்தை ஆயிரம் இதழ்களையுடைய தாமரை மலர் போன்று உள்ளது என்றும் இச்சக்கரம் சரியான முறையில் இயக்கப்பட்டால் உட்புற இதழ்கள் பன்னிரெண்டும் மலர்ந்து விரிந்து சக்தியை ஏற்று உடலெங்கும் அனுப்பிவைக்கும் என்றும் ஓர் ஒளிவட்டம் தலையைச் சுற்றி ஏற்படும் என்றும் இவர்கள் தெய்வீகத் தன்மை உடையவர்களாக விளங்குவார்கள் என்றும் கூறப்படுகின்றது.

இதற்கான மந்திரம் 'ஓம் ஹூம் சத்தியம் ஓம்.' பொதுவாக எமது பிராண உடலில் மேற்காட்டப்பட்ட சக்கரங்களை விட பல உப சக்கரங்களும் சிறிய சிறிய சக்கரங்களும் காணப்படுகின்றன. இவைகள் அனைத்துமே தூல உடலின் உறுப்புகளுக்கு புத்துணர்ச்சி அளித்து சிறந்த முறையில் இயங்க உதவுகின்றன. அத்தோடு எம்முள் உறைந்து கிடக்கும் அபூர்வ ஆற்றல்களை வெளியில் கொண்டு வருவதற்கும் துணைபுரிகின்றன.

கலாபூஷணம்,
கா.சந்திரலிங்கம்
(ஓய்வுநிலை அதிபர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இலங்கையின் ஒரேயொரு தொன்மை வாய்ந்த மீனாட்சி அம்மன் ஆலயம்




சகா
கா.சந்திரலிங்கம்
Chandralingham13@gmail.com

**இலங்கையில்** இருக்கும் ஒரேயொரு மீனாட்சி அம்மன் ஆலயம் என்றால் அது மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயம் மட்டுமே. அவ்வாலயம் கிழக்கில் அதுவும் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ளது.

அம்பாறைமாவட்டத்தில் நிந்தவூர் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட மருதநிலசூழலில் மாட்டுப்பளை மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயம் எழுந்தருளி சுமார் 300வருடங்களாக அருள்பாலித்துக்கொண்டிருக்கிறாள்.

சுற்றவர வயல்வெளிகளுக்கு மத்தியில் ஆலமரம் அரசமரம் மாமரம் கமுகு தென்னை மரங்கள் நிறையப்பெற்ற ஒரு மனோரம்மியமான தண்மையான சூழலில் இவ்வாலயம் அமைந்துள்ளதும் சிறப்புத்தான். அங்கு சென்றவர்கள் உடனே திரும்பமுடியாதளவிற்கு அந்த சூழல் பக்தர்களைசுண்டி ஈர்க்கிறது.

காஞ்சியில் காமாட்சி மதுரையில் மீனாட்சி மடத்தடியிலும் மீனாட்சி என்பார்கள்.முதலில் இவ்வாலயத்தின்வரலாறு பற்றி சமகால சந்ததிகள் அறியவேண்டும் என்பதற்காக இக்கட்டுரையில் முதலில் அதனைத் தருகின்றோம்.

18 ஆம் நூற்றாண்டு காலத்தில் (கி.பி.1766)இவ்வாலயம் அமைக்கப்பட்டதாக வரலாறு கூறுகிறது. அக்காலத்தில் சிற்சில பிராந்தியங்களில் வன்னிமையின் சிற்றாட்சி நிலவியது.

மட்டக்களப்பில் மண்முனைப் பற்று வன்னிமைகளான அம்பிளாந்துறை கந்தப்போடி சத்துருக்கப்போடி கதிரமலைப்போடி அறுமக்குட்டிபோடி ஆகியோரின் கண்காணிப்பில் சில ஆலயங்கள் பரிபாலிக்கப்பட்டுவந்தன. அதேபோல் மட்டக்களப்பின் தெற்கே நற்பிட்டிமுனையில் வாழ்ந்த கரவாகுப்பற்று வன்னிமைகளான சின்னத்தம்பி செல்லையா வன்னிமையின்கண்காணிப்பில் திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுதசுவாமி ஆலயம் பாண்டிருப்பு திரௌபதை அம்மன்ஆலயம் மாணிக்கப்பிள்ளையார் ஆலயம் நற்பிட்டிமுனை மாணிக்கப்பிள்ளையார் சேனைக்குடியிருப்பு பத்ரகாளியம்பாள் ஆலயம் என 5ஆலயங்கள் பரிபாலிக்கப்பட்டுவந்தன.

அதேபோன்று அட்டப்பள்ளத்தை மையமாகக்கொண்டு நிந்தவூர் பற்று வன்னிமையான சிங்காரபுரி வன்னிமை ஆட்சி நிலவியது. சிங்காரபுரித்தோட்டத்தில் இருந்து அந்தக்காலத்தில் அட்டப்பள்ளம் தொடக்கம் காரைதீவு வரையான பிரதேசத்தை பரிபாலனம் செய்துவந்தான்.அதனை சிங்காரத்தோப்பு எனக்கூறுவர்.அஙகிருந்து வன்னிமை யானை மீதேறி அப்பிரதேசமெங்கும் வலம்வருவது வழமை.ஒரு தடவை காரைதீவு கண்ணகை அம்மன் ஆலயத்திற்கு யானையில் வந்து வணங்கியபோது இடம் பெற்ற ஒரு சம்பவத்தில் கண்பார்வையை இழந்த தனது மனைவிக்கு அம்மனின் அருளால் கண்பார்வை கிடைத்தமைக்காக காணிவழங்கிய நிகழ்வும் நடந்தேறியிருக்கிறது.இவையெல்லாம் கற்பனைக்கதையல்ல. அனைத்திற்கும் ஆதாரபூர்வமான பதிவேடுகளுள்ளன.மேலும் பண்டிதர் வீ.சீ.கந்தையா உள்ளிட்ட பலர் எழுதிய பல நூல்களில் காணலாம்.

16ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் காளி ஓடையின் அருகே காளிகோயில் இருந்ததாக வரலாற்று ஆய்வுகளும் சான்றுகளும் உறுதிப்படுத்துகின்றன.

சிங்காரபுரி வன்னிமை இந்த மடத்தடி எனும் இடத்தில் ஆலயமொன்றை அமைத்து அருகில் தீர்த்தக்கேணியையும் அமைத்து வழிபட்டுவந்தான் .அதே சூழலில் அவனது மாளிகை அமைந்திருந்த காரணத்தினால் அருகே பாதுகாப்பிற்காக செங்கண்படை ஒன்றையும் வைத்திருந்தான். அவனது மாடுகள் பட்டிபட்டியாக அந்தச்சூழலில் வளர்க்கப்பட்டன.

இவைதான் இன்று இவ்வாறு மருவி அழைக்கப்படுகின்றன.

காளி ஓடை என்பது களியோடை என்றும் செங்கண்படை என்பது செங்கற்படை என்றும் சிங்காரபுரித் தோட்டம் என்பது தோப்புக்கண்டம் என்றும் வன்னிமையின் மாடுகள் வளர்க்கப்பட்ட இடம் மாட்டுப்பளை என்றும் தற்போது அழைக்கப்படுகிறது.

மிகுதி
https://www.kalmunainet.com/
கல்முனைநெற் இணையத்தில்....










**பொதுவாக** மாணவரிடையே பரீட்சை என்னும் போது மன அலுத்தமும், பதட்டமும், பயமும் வருவது இயல்பானதுதான் எனினும் தற்போதைய சூழலில் அதாவது இன்றைய நிலையில் நாட்டில் காணப்படும் ‘கொவிட் 19’பரவல் அதிகரித்து காணப்படுவதுடன் மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரித்து காணப்படும் இக்கால கட்டத்தில் பரீட்சையை எதிர்நோக்கும் மாணவர்களின் மனநிலை என்பது மேலும் பல வழிகளில் பாதிக்கப்பட்டதாகவே காணப்படுகின்றது.

சாதாரண காலங்களில் பரீட்சை நேரத்தில் மாணவர்களுக்கு மன அழுத்தம் வருவதற்கு உடல் மற்றும் உளரீதியான பல காரணங்கள் ஏதுவானவையாக காணப்படுவதனை காணலாம். அந்த வகையில் தவறான உணவுப்பழக்கங்ள், உடற்பயிற்சியின்மை, குறைவான தூக்கம், குடும்பசுமை என்பனவும், உளரீதியாக பெற்றோர், ஆசிரியர்களின் அனுகுமுறைகள், பயம், மாணவர்களின் தவறான எண்ணங்கள், குடும்ப வறுமை என்பன காரணங்களாக காணப்பட்ட போதிலும் தற்போதைய அசாதாரன சூழலில் இன்னும் பல காரணிகள் மாணவர்களின் உடல் உள செயற்பாடுகளையும் மன அழுத்தத்தையும் ஏற்படுத்துகின்றன.


அநத வகையில் தற்போதைய சூழ்நிலையில் பாடசாலைகள் சரிவர இயங்காமை, பாடங்களை போதியளவில் முடிக்கப்படாமை, பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்காக நடத்தப்படாமை, மேலதிக வகுப்புக்கள் இயங்காமை, அத்துடன் கையடக்கத் தொலைபேசிகள், கணனிகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட முகிழ்நிலை வகுப்புக்கள் சரியாக மாணவர்களை சென்றடையாமை, செயலட்டைகள், கருத்தரங்குகள் ஒழுங்காக மேற்கொள்ளப்படாமை என பல்வேறு தடைகளும் மாணவர்களை சரியான முறையில் பரீட்சைக்கு தங்களை தயார்படுத்த இயலாத வகையில் இடையூறுகளை ஏற்படுத்தியுள்ளது.

பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகளின் நிலையினை கருத்தில்கொண்டு வேதனைப்படும் நிலையே காணப்படுகிறது. இவ் அசாதாரன சூழல் நிலையில் மாணவர்களை பாடசாலைக்கு அனுப்புவதையோ தனியார் வகுப்புகளுக்கு அனுப்புவதையோ, தனிப்பட பாடங்களை ஆசிரியர்களைக் கொண்டு கற்பிப்பதையோ செய்ய முடியாத நிலையில், பாடசாலைகள் மூலம் அல்லது தனிப்பட்ட ஆசிரியர்கள் மூலம் மேற்கொள்ளும் முகிழ்நிலை வகுப்புக்கள் மூலமாக பிள்ளைகள் கற்கும் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய வகையில் பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு வசதிகளை ஏற்படுத்தும் போது அது வேறுபல பிரச்சினைளை தோற்றுவிப்பதனால் அதாவது பல மாணவர்களின் கண்களில் பாதிப்புக்களை ஏற்படுத்துவதையும், பிள்ளைகள் கையடக்கத் தொலைபேசிகளை தவறான செயற்பாடுகளுக்கு பயன்படுத்துவதையும், பிள்ளை என்ன செய்கின்றார் என்பதை பெற்றோர் அறியமுடியாதுள்ளதுடன், பிள்ளைகள் கூடுதலான நேரத்தை வீணாக தொலைபேசிகளுடாக செலவழிப்பதையும் பின்னர் பிள்ளைகளை இச்செயற்பாடுகளில் இருந்து விடுபட வைப்பது பெரும்பிரச்சினையாக இருப்பதையும் அவதானிக்கும் போது பெற்றோர்படும் வேதனைகள் காரணமாக அவர்களும் மன அழுத்தத்திற்கு ஆளாகியுள்ளதைக் காணலாம்.

இதன் காரணமாக பெற்றோர் ஊடாகவும் பிள்ளைகள் மீது அதிக சுமையும், மன அழுத்தங்களும் ஏற்படுகின்றன. அத்துடன் பாடசாலைகளில் நடைபெறும் செயற்பாடுகளும் பிள்ளைகளை மன அழுத்தம் ஏற்படக் காரணமாகின்றன. அதாவது மாணவர்களின் பெறுபேறுகள் குறைவடைவதை பாடசாலைகள் விரும்புவதில்லை அந்த வகையில் எப்படியாவது பெறுபேறுகள் வீழ்ச்சியடையாத வகையில் மாணவர்களின் கற்றலை மேம்படுத்த வேண்டுமென எண்ணும் வகையில் பல்வேறு செயற்பாடுகளை மாணவர்கள் மீது சுமத்தும் போது அது மாணவர்களின் மனநிலையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அத்துடன், பல மாதங்களாக வீடுகளில் இருந்த நிலையில் பிள்ளைகள் பாடசாலைகளில் இருந்து விலகிய மன நிலையிலும், நோய் தொற்று தொடர்பிலான பயந்த நிலையிலும், பிள்ளையின் மனம் பாடசாலையில் கற்றல் செயற்பாட்டிற்குள் மாறும் போது அது ஒரு சுமையாகவே அவர்களை தாக்குவதுடன் ஓர் வகையான வெறுப்பு மனப்பாங்கை ஏற்படுத்தவும் செய்கிறது.

எனவே இனிவரும் காலங்கள் குருகியதாக இருக்கின்ற போதிலும் நாம் நமது பிள்ளைகளை எவ்வாறு பாதுகாத்து பரீட்சைக்கு அவர்களை தயார்படுத்த வேண்டும் என்பதை அவதானிப் போமாயின்,

பிள்ளையின் மனஅழுத்தத்தை குறைக்கும் வகையில் பெற்றோர்களும், ஆசிரியர்களும் செயல்படுவதன் மூலம் மாணவரிடையே நம்பிக்கையை வளர்த்துக்கொள்ள முடியும். அவர்களிடமுள்ள குறைகளை சுட்டிக்காட்டாது, மற்றவர்களுடன் ஒப்பிட்டு பேசாது, நோய் தொடர்பான பயத்தை குறைக்கும் வழிவகைகளை கூறி பிள்ளையின் பயத்தை இல்லாது செய்தல் வேண்டும். அத்துடன், பெற்றோர்கள் பிள்ளைகளுடன் அதிக நேரத்தை செலவு செய்து அவர்களின் சோர்வு, பயம், மன அழுத்தம், நம்பிக்கையின்மை, பதற்றம், மறதி என்பவற்றை குறைத்துக்கொள்ள முடியும்.



ஆசிரியர்கள் மாணவர்களின் நிலைமையினை புரிந்து பிள்ளைகள் மீது சுமையான கற்றலை மேற்கொள்ளாது இக்குறுகிய கால இடைவெளியில் எவ்வாறு மாணவரிடையே உள்ள குறைகளை போக்கி மாணவரின் மன நிலையில் நம்பிக்கையை ஏற்படுத்தக் கூடிய வகையில் தமது கற்றல்களை தயார்படுத்தி திட்டமிட்டு செயற்படுவதன் மூலம் வெற்றிகரமாக பரீட்சைக்கு முகம் கொடுக்ககூடிய வகையில் மாணவர்களை உருவாக்கிகொள்ள முடியும்.

## உங்களால் முடிந்தவரை முயற்சி செய்யுங்கள்

மிகுதி
https://www.kalmunainet.com/
கல்முனைநெற் இணையத்தில்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசாந்திரி
## ஜிப்சி நாடோடி

வாழ்தலின் திரட்சியே அனுபவம் என்பது என்னளவில் சமுத்திரத்தில் வீழும் ஒற்றை மழைத்துளிக்கு சமனானது.நீள்தலின் தொடர்ச்சியே அனுபவமென்பது என் முடிந்த முடிவு.

நீள்தல் உங்களை உயிர்ப்பாக்கும் உத்தி.செத்துக்கிடக்கும் மனசை உசுப்பிவிடும் நிகழ்ச்சி.ஒற்றைக் குச்சியை வாயில் சுமந்து அதை மட்டும் நம்பி சமுத்திரம் தாண்டுகின்ற பறவைகள் ஜாதியில் நாமும் இணைவது நீள்தலில்தான்.நீள்தல் புதிய மனிதர்களை புதிய இடங்களை புதிய சூழ்நிலைகளை புதிய அனுபவத்தை மனக்கிடங்கில் கொட்டிவிடுகிறது.

பயணங்கள் யாவும் நீள்தல்தான். 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்ற கணியன் மங்கொன்றனின் வாசகத்தை காதில் ஊற்றிக்கொண்ட ஒவ்வொரு மனிதனும் பயணத்தில் பரிவுறுகிறான்.அனுபவங்களில் ஆழ்ந்து போகின்றான்.

வானம் என்பது எப்படி நீலப்பொய்யோ வாழ்க்கை என்பது எப்படி பச்சைப்பொய்யோ அதே போல் நரைகொண்ட பின்னர் அனுபவம் வரும் என்பதும் பயணிப்பவன் எல்லாம் அனுபவ மூட்டை என்பதும் ஆகப் பெரிய பொய். பயணங்களை வெறுப்பவன் புனிதனாக முடியாது.பழஞ்சாதம் கூட சாப்பாட்டுத்தட்டில் ஏறிய பின்னர் பிரசாதமாகிவிடுகிறது.இப்படி எண்ணுகிறவனே அனுபவிக்கின்றான் அதில் பாடத்தை உணர்கிறான்.பரதேசிகளும் பயணிப்பவர்களே நீங்கள் பரதேசியா ? உலகநேசியா? உங்கள் மனங்களிலேயே தங்கியுள்ளது. தண்டவாளங்களில் தாலாட்டியபடியே ஓடும் ரயில்கள்இ மேகங்களோடு உரசும் விமானங்கள்இநிறைமாத கற்பிணியாய் மலையேறுகிற கிராமப் பேருந்துகள்இகுழந்தைப் பருவத்தில் நடுக்கம்பிக்கிடையில் கால்விட்டு ஓடிய மாமாவின் சைக்கிள்இபின்பக்கத்தைஜள।ஸ மணலால் நிரப்பி பயணித்து சென்ற டிப்பர்கள் சொட்டுப் பெற்றோலில் பக்கத்து ஊர்வரை பயணமான மோட்டோர் சைக்கிள்எல்லாம்....இவை எல்லாம் பயணத்தின் பிரம்மாக்கள்.பயணங்களை ரசியுங்கள்.பயணங்களை நேசியுங்கள்.வானமும் மமியும் எல்லையற்றதென்று எண்ணுங்கள்.

புத்தனைப்போல் தவமிருக்கும் மலைகளை புல்வெளிகளில் தூங்கிக்கிடக்கும் பனித்துளிகளைஇதலைக்குமேல் குடைபிடிக்கும் மேகங்களை உச்சந்தலை சுடுகிற வெயிலைஉடல் நடுங்க வைக்கும் பனியைஆற்றங்கரையில் உண்ணும் நிலாச் சோற்றை விலங்கின் காலடி கூட படாத பெருவனங்களை குளத்தில் பிடித்து பொரித்துச் சுவைக்கும் மீன்களைஇஉச்சி மலையில் கொட்டும் மழையின் தேநீரை மங்காக்களில் சிரிக்கின்ற மலர்களைஅவற்றிடம் தேனை யாசிக்கும் வண்டுகளை கடலைமணலைகாற்றுவெளியை உனதென்று ரசி.உலகில் கரைந்து போ...உடனே பயணம் போ...

**நீலாவணை இந்திரா**

# மலராத பூக்கள்

**திருமதி. யௌவனா வசந்தன்**
**பாண்டிருப்பு**

**இவ்வார சிறுகதை**

**கடந்த வாரத் தொடர்ச்சி...**

*அழாதீங்க.. மாமி வீட்ட இருக்கிறத விட இங்க இருந்தா கொஞ்சமாவது கதைக்க வாய்ப்பிருக்கு. ஏதோ தன் பங்கிற்கு ஆறுதல் கூறினாள் தீபா. ம்ம்.. என்ற ஒரு வார்த்தையை மட்டும் கூறிவிட்டு மீதி வார்த்தைகளோடு வலிகளையும் சேர்த்து தற்காலிகமாக விழுங்கிக் கொண்டான் ரமேஷ்.*

*விடைபெறும் நேரமாவது தாயின் கண்களில் மாறுதல் இருக்குமா என எதிர்பார்த்தவன் ஏமாற்றங்களை மட்டும் வாங்கிக் கொண்டு திரும்பினான். அந்தக் காப்பகத்தில் இருந்த பலரையும் அவன் கடந்துகொண்டிருந்தான். தன் தாயை இந்நிலையில் கண்டதிலிருந்து அங்கிருந்த ஒவ்வொருவரையும் ஒரு குழந்தையாகவே அவன் கடந்து கொண்டிருந்தான். அப்படி ஒரு குழந்தையாகவே வாயிலின் மரத்தடியில் முடங்கியிருந்த ஒரு பெண்ணைக் கண்டான். அவனையறியாமலேயே அவளருகில் சென்று விறைத்தவாறு நின்றான் ரமேஷ். அவளும் மனோவைப் போலவே இருந்தாள்.*

*தீபாவினால் சுய நிலைக்கு வரரந்தவன்.. கீழே இருந்த அப்பெண்ணின் அருகே அமர்ந்து அவளின் கைகளை வருடிக் கொடுத்தான். அவனது அந்த நடத்தைக்கான காரணத்தை அவனாலேயே விளங்கிக்கொள்ள முடியவில்லை. அவனது இந்த அன்பான ஒரு வருடலால் ஏற்கனவே எல்லை வரை நிரம்பியிருந்த அவளின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து ரமேஷின் கைகளை நனைத்தது. அவளின் ஈரக்கண்களின் கூரிய பார்வையை எதிர்கொள்ள முடியாதவனாய் சடார் என எழுந்துகொண்ட அவன் அவ்விடத்தை விட்டு விலகிச்சென்றான்.*

*ஆனால் அவனின் கைகளில் விழுந்த கண்ணீர்துளி அவன் தந்தையால் சிதைக்கப்பட்ட மலருக்குரியது என்பதை அவன் அறியப்போவதுமில்லை, அந்தக் கண்ணீரின் சூடும் என்றும் ஆறப்போவதுமில்லை..*


# ஓர் ஓவியக் கதை





நான் எங்குதான்
சென்றுவிட்டேன்.
எங்குமே செல்லவில்லையே
உங்களுடன்தான் இருக்கிறேன்.
என்றும்போல் மகிழ்வுடன்
இருங்கள்
ஏன் இந்த நினைப்பு?
நான் இல்லையென்று

நான் உங்களை நீங்கியது
உருவ வடிவில்தானே
வாழ்க்கைப் பயணத்தில்
உங்களிலோர் அங்கத்தவனாக
இருக்கவில்லையா?
சேர்ந்து கழித்த பொழுதுகளை
மீளுங்கள்
மகிழ்ந்த கணங்களும் சிரித்த
நிமிடங்களும்..
ஆசைகளும் அவஸ்தைகளும்
தோல்விகளும் துயருற்ற
துயரங்களும்
சந்தித்த மானிடர்களும்
எமை ஒன்றாய்ப் பிணைத்த
அன்பும் நட்பும் காதலும்
இவையெல்லாம்
அர்த்தமற்றவையா?

நான் எங்கு சென்று விட்டேன்?
எங்குமேயில்லை
வாழ்க்கையின் மறுபக்கமே
வந்துள்ளேன்.
உங்கள் சிந்தனையில்
இருக்கின்றேன்.
மறக்கும் மனதினை
மீட்டுப் பாருங்கள்
அங்கு நான் இருப்பேன்...
உருவமற்றவனாக
வாழ்க்கையின் மறுபக்கந்தான்
வந்துள்ளேன்.
நீங்களும் அங்கு வருவீர்கள்..
அதன் பின்தான்
நான் அழிவேன்.
அழுதிட யாருமற்றவனாக..
அதுவரை நான்
வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.
வாழ்ந்து கொண்டிருப்பேன்
உங்கள் நினைவுகளில்
உருவமற்றவனாக..



**பாண்டியூர் இரா.நி.தாசன்**




சபா சபேஷன்
sabasabeshan@yahoo.com

# யந்திரச் சப்பாணிகள்.

விரல் நுனியில்
உலகப் பரப்பின் தரிசனம்.
ஓசோன் படலம் கிழிந்து
கீழிறங்கி தொங்குகிறது.
அனர்த்த வட்டம் எம்மை
ஆக்கிரமித்து நிற்கிறது.

குறியீடுகளில்.....
கடவுச்சொற்களில்
நிறைந்துள்ளன தேவைகள்
பிள்ளைபெறும் 'றோபோக்கள்'
வருவதுதான் மிச்சம்.

அவதியில் மிதக்கின்ற
அச்ச வாழ்வில்
எங்கிருந்தோ ஓர்
ஊதுகுழலில் மட்டுமே
மெல்லிதாய்க் கேட்கின்றன
அன்பு பாசம் மனிதம்
இவற்றுக்கான
வலிகளின் குரல்கள்.

**கலோதயன்**




# நற்பிட்டிமுனையின் வரலாற்றுப் பின்புலத்தில் கல்வி முன்னெடுப்புக்கள்

**கடந்த வாரத் தொடர்ச்சி...**

18ம் நூற்றாண்டில் கல்விமுறையில் போடிமார் தம்பிள்ளைகளுக்கு கல்விஅறிவுடைய ஆசிரியர்களைகற்பிக்க அமர்த்தினார்கள். இவர்கள் சட்டம்பிமார் எனஅழைக்கப்பட்டார்கள். அவர்கள் பாரதம், நிகண்டு, விவேகசிந்தாமணி, ஔவையார் பாடல்கள் முதலானவற்றை மனனம்செய்து கற்றுக் கொடுப்பவர்களாக இருந்தார்கள். சட்டம்பிமார்களுக்கு வகைமுறையான ஊழியம் கொடுக்கப்படவில்லை. மாணவர்கள் நாளாந்தம் கொடுக்கும் கையுறையும், வருடம்தோறும் எண்ணெய்ச்சிந்துபாடுவதால் கிடைக்கும் வருமானமும் வயல்விளைச்சலின் பின் கொடுக்கப்படும் புதிர்என்பனவையுமே இவருக்கு ஊதியமாய் அமைந்தன.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் முறைசார் கல்விச்செயற்பாடுகள் முன்னெடுக்கும் பாடசாலைகள் 1814 இல் மெதடிஸ்த சபையினால் ஏற்படுத்தப்பட்டன. [வரலாறு தரும்மட்டக்களப்பு, பக் 47] 1883 களில் மெதடிஸ்த சபையினால் பெண்கள் விடுதிப்பாடசாலை கல்முனையில் நிறுவப்பட்டது. அதனைத்தொடர்ந்து 1905களில் இதே மிசனறி லீஸ் எனும் பாடசாலையை ஆரம்பித்தது .இரண்டும் ஆங்கிலப்பாடசாலைகளாக இயங்கின. பின்னாளில் இவை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையாக இணைக்கப்பட்டன.

### நற்பிட்டிமு னையின் முதல் பள்ளிக் கூடம்

நற்பிட்டிமுனையில் பள்ளிக்கூடத்தை முதன்முதலில் ஆரம்பித்து நடத்தியவர் சிவஸ்ரீகுமாரசுவாமி குருக்கள் ஆவார். நற்பிட்டிமுனை அருள்மிகு ஸ்ரீநகு லேஸ்வரர் ஆலயத்தைஉருவாக்கியவரும் அவரே. ஆலயத்திற்கு முன்னாக இருந்த அவரது காணியில் அமைக்கப்பட்ட ஓலைக் கொட்டகையில் பாடசாலைநடத்தப்பட்டது. ஐயரின்பள்ளி என மக்களால் அழைக்கப்பட்ட இப்பாடசாலையில் சீனித்தம்பி உபாத்தியார், பிச்சப்பிள்ளை உபாத்தியார் ஆகியோர் ஆசிரியர்களாகக் கடமையாற்றினர் எனஅறியமுடிகின்றது. 1872 இல் மெதடிஸ்தமிசன் தமது தேவாலயப்பள்ளி ஒன்றை (Ni-malMendis, A History of the methodist church, Sri Lanka 1814 2008, page 608) நற்பிட்டிமுனையில் நடத்தியது. மெதடிஸ்த சமயப்பரப்புகையில் இப்பள்ளி முக்கிய பங்குவகித்தது.

### அரச பாடசாலை தாபிப்பு

1928களுக்குப் பின் இலங்கையில் ஏற்பட்ட கல்வி கட்டமைப்பு மாற்றங்கள் தமிழ்மொழி மூலப்பாடசாலைகளின் தோற்றுவிப்பு பற்றிய முனைப்புக்குவித்திட்டன. நற்பிட்டிமுனையில் அரச உதவிபெறும் பாடசாலை ஒன்றை அமைக்கும் முயற்சிகள் உயர்திரு.கே.வீ. இரத்தினசிங்கம், திரு.செல்லையா வன்னியனார் மற்றும் சிவஸ்ரீகுமாரசுவாமிகுருக்கள் உள்ளிட்ட கிராமப்பெரியவர்களால் முன்னெடுக்கப்பட்டன.

1931 டொனமூர் சீர்திருத்தம் உள்ளூர் நிலைமைகளுக்குப் பொருத்தமான கல்விக் கொள்கைகளை ஆக்குவதற்கு வழிவகுத்தது. பின் சர்வசன வாக்கெடுப்பு நடாத்தப்பட்டதும் இதில் சுதேச கல்விக்கான முக்கியத்துவம் முன்னெடுக்கப்பட்டதுமான நிகழ்வுகள்ஏற்பட்டன.

இவ்வாறு நற்பிட்டிமுனைப் பள்ளி மட்/நற்பிட்டிமுனை அரசினர்பாடசாலை என்ற பெயருடன் 1932ஆம் ஆண்டு அரச பாடசாலையாக தொடக்கம் பெற்றது. இப்பாடசாலைக் கட்டடத்திற்கான காணியை திரு.கே.வீ.இரத்தினசிங்கம் அவர்கள் வழங்கினார்கள். பாடசாலையின் அப்போதைய பதிவிலக்கம் 796. பாடசாலையின் முதலாவது தலைமை ஆசிரியராக திரு.வே.சாமித்தம்பி அவர்கள் 01.03.1932 இல் நியமிக்கப்பட்டார்.

### பாடசாலையின் ஆரம்பகால அதிபர்கள்

மட்/நற்பிட்டிமுனை அரசினர் பாடசாலையில் தமிழ், முஸ்லிம் மாணவர்கள் ஒன்றாகவே கற்று வந்தனர். சில காலங்களின் பின் பெண் பிள்ளைகளும் கற்கக்கூடியதாக மட்/நற்பிட்டிமுனை அரசினர் தமிழ்கலவன் பாடசாலை என மாற்றம் பெற்றது. தற்போது சிவசக்தி மகாவித்தியாலயம் அமைந்துள்ள சூழலில் ஆண்கள்பிரிவும் அல்அக்ஷா மகாவித்தியாலயம் அமைந்துள்ள பகுதியில் பெண்கள் பிரிவுமாக தமிழ் முஸ்லிம் மாணவர்கள் இணைந்து ஒரேகுடையின் கீழ் கற்றுவந்தனர். திரு.வே.சாமித்தம்பி அவர்கள் 01.01.1939 இல் மாறுதல் பெற்று மருதமுனை அ.த.கபாடசாலைக்கு தலைமை ஆசிரியராகச் சென்றார். அதன் பின் 1944 வரை இப்பாடசாலையின் செயற்பாடுகள்பற்றிய பதிவுகள் கொண்டகுறிப்பேடுகள் கிடைக்கவில்லை. இதனால் இப்பாடசாலையின் ஆரம்பகால வளர்ச்சிப் போக்குகள் பற்றி துல்லியமாக கூறுவது இயலவில்லை.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாசா எரிப்பிற்கு முதன்முதல் குரல் கொடுத்தது தமிழர்தான்!

## நிந்தவூர் உபதவிசாளர் சுலைமாலெவ்வை பெருமிதம்

**நான்** ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியைச் சேர்ந்தவன். முஸ்லிம்களின் ஜனாசா எரிப்பிற்கு எதிராக பாராளுமன்றத்தில் முதன்முதல் குரல் எழுப்பியவர் சுமந்திரன் அவர்கள். ஏனைய தமிழ்ப்பிரதிநிதிகளும் குரல்கொடுத்தார்கள். எம்மவர்களும் எதிர்த்தார்கள். வெகு விரைவில் ஜனாதிபதி நல்லபதிலைத்தருவார் என்ற ந2ம்பிக்கை எனக்கிருக்கிறது.

இவ்வாறு நிந்தவூர் பிரதேசசபையின் உபதவிசாளரும் நிந்தவூர்தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அமைப்பாளருமான வை.எல்.சுலைமாலெவ்வை கூறினார்.

கல்முனைநெற் வாரஇதழின் 4வது இதழுக்கான நேர்காணலின்போது நீங்கள் சு.கட்சியைச்சேர்ந்தவர்.ஜனாசா எரிப்பிற்கு உங்களால் என்ன செய்யமுடிந்தது எனக் கேட்டபோது அதற்குப்பதிலளிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவருடனான நேர்காணலைத்தருகிறோம்.

**கேள்வி: ஜனாதிபதி சுதந்திரதினஉரையில் பௌத்தமக்களின் தலைவன் என்பதில் பெருமிதம்கொள்ளவதாகக்கூறியுள்ளாரே..**

பதில்: சுதந்திரதினஉரையை பூரணமாகக் கேட்டால் தெரியும். தான் மூவினமக்களின் தலைவர். நாட்டில் ஒரு சட்டம்தான் என்றெல்லாம் கூறியிருக்கிறார்.பௌத்தமக்களின் தலைவரும் அவாதானே. அதில் தவறில்லை.

**கேள்வி:தமிழில் தேசியகீதம் மறுக்கப்பட்டதுதொடர்பாக அபிப்பிராயம் என்ன?**

பதில்: எமது தேசியகீதம் நாட்டிற்கு வரப்பிரசாதமாகும். அது மும்மொழியிலும் பாடக்கூடியது. பெரும்பான்மையினத்தையும் அரவணைத்துப்போகவேண்டிய கட்டாயம் ஜனாதிபதிக்குள்ளது. இருந்தும் அவரது வாயால் சிங்கள்மொழியில் மட்டும் பாடப்படும் என்று கூறவில்லை.

**கேள்வி: நீங்கள் ஒரு சமாதானப்பிரியர். இன்றைய நிலையில்என்ன கூறுகிறீர்கள்**

பதில்: ஒற்றுமைதான் முக்கியம். தமிழ் முஸ்லிம் ஒற்றுமை மட்டுமே எமது சிறுபான்மை இனங்களின் உரிமைகளைப் பெற்றுத்தருமே தவிர வேறொன்றாலும் முடியாது.எனது அரசியல்தந்தை எம்.எம்.முஸ்தபா. அவர் இருஇனங்களையும் தனது இருக்கண்கள் போல பார்த்தவர்.வழிநடாத்தியவர். அவரது பாணியில் நானும் பின்தொடர்கிறேன்.

**கேள்வி: நிந்தவுர் என்றால் முஸ்தபா எம்.பி என்பார்கள் அன்று. அவர் கொள்கையை இன்றுயாராவது பின்பற்றுகிறார்களா?**

பதில்: நானிருக்கிறேனே. ஒருதடவை அன்று நீங்கள் வந்துஅவரிடம் பேட்டி கண்டீர்கள். அவர் எத்துணை நிதானமாகப் பதிலளித்தார். இன்றும்; ஞாபகமிருக்கிறது. ஒருகட்டத்தில் உங்களது கேள்விக்கு தம்பி பிரபாகரனைச்சந்தித்த பின்பு பதிலளிக்கிறேன் என்றுநிதானமாகச்சொன்னார். அப்படி இனங்களை பாதிக்காதவண்ணம் நல்றவை வளர்த்தவர் அவர்.

**கேள்வி: 1லட்சம் வேலைவாய்ப்பில் ஒரு சாரார் பாதிக்கப்பட்டிருப்பதை எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

பதில்: இருக்கலாம்.சிறுபான்மையினம் எப்போதும் பெரும்பான்மையினரை அனுசரித்துத்தான் செல்லவேண்டும். அரசைப்பலப்படுத்தியவர்களுக்கு தற்போது வழங்கப்படுகிறது. கட்டம்கட்டமாக ஏனையவர்களுக்கும் வழங்கப்படும்.

**கேள்வி: வழமைபோல ஜெனீவா மனித உரிமைகள் அமர்வு இடம்பெறப்போகின்றது. ஏதாவது நடக்குமென்றுஎதிர்பார்க்கிறீர்களா?**

பதில்: 2009யுத்தத்திற்குப்பிறகு 11வருடகாலமாக தமிழ்மக்களுக்கு நீதிகிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டுள்ளது. யுத்தக்குற்றம் பற்றி ஆதாரமாக முன்வைக்கப்படுகிறது. இந்த காலகட்டத்தில் தமிழ் முஸ்லிம் மக்கள் ஒற்றுமையைக்காட்டினால் ஏதாவதைப் பெற்றுக்கொள்ளலாம்.ஜெனீவா நல்ல பலனைத்தருனெ;று நம்புவோம்.

**கேள்வி: இனநல்லுறவுபற்றி பேசுகிறீர்கள்.? தங்கள் தொகுதிக்குள் உள்ள அட்டப்பள்ளம் நிந்தவுர் ஆம் பிரிவு தமி;மக்களுக்கு நீங்கள் என்னசெய்துள்ளீர்கள்?**

பதில்: 2006இல் பிரதேசசபைதேர்தலின் போது அட்டப்பளமக்கள் என்னிடம் ஒளி கேட்டார்கள். எம்.பி . எம்சி.கனகரெத்தினத்திற்கு பிறகு யாரும் தங்களை ஏறெடுத்தும் பார்க்கவில்லை என்றும்கூறினார்கள்.



மறுநாளே 25லட்சத்திற்கு மின்குமிழ்வாங்கி 5வீதிகளில் பொருத்;திக்கொடுத்தேன் அது காலத்தின் கட்டாயம். தமிழ்மக்களோடு சேர்ந்து பயணித்தால் மட்டுமே விமோசனம். அதுபோல நிந்தவுர் தமிழ்மக்களுக்கும் உதவியுள்ளேன். காரைதீவு மக்களுக்கும் உதவிசெய்துள்ளேன். சிறுபான்மைத்தலைமைத்துவங்கள் தடுமாறுகின்றன.

**கேள்வி: மாகாணசபைமுறைமையை ஆதரிக்கிறீர்களா?**

பதில்: ஆம். எதிர்வரும் தேர்தலில் மாகாணசபைதேர்தலில் நின்று எமது மாவட்ட சிறுபான்மையினத்தவரனைவருக்கும் சேவை செய்யக்காத்திருக்கிறேன்.

**கேள்வி: நிந்தவுர் பிரதேசசபையை அலங்கரிக்கும் நீங்கள் இறுதிதேர்தலில் துரும்புச்சீட்டாக விளங்கினீர்கள். அதன்பின்னால் எதையாவது சாதிக்க முடிந்ததா?**

பதில்: நான் 2006இலும் 2011இம் எதிர்க்கட்சி உறுப்பினராக தவைராகச்செயற்பட்டேன்.இறுதியாக 2018தேர்தலில் மு.காவிற்கு 6ஆசனம் அ.இ.ம.காங்கிரசுக்கு 6ஆசனம். எனக்கு 1ஆசனம். இக்கட்டத்தில்;நான் விரும்பினால் மட்டுமே யாராவது ஆட்சியமைக்கலாம்.அந்தக்கட்டத்தில் என்னால் தவிசாளராகக்கூட ஆகியிருக்க முடியும். இருப்பினும் நான் அதைவிட்டுக்கொடுத்து பிரதிதவிசாளரானேன். கோடிக்கணக்கில் நிதியைக்கொண்டுவந்துகொட்டியுள்ளேன். அதற்கு நான் 30வருட சு.கட்சி உறுப்பினர்; என்பதும் காரணம்.

**கேள்வி: சிறுபான்மைத்தலைமைத்துவங்கள் தடுமாறுவதாகக்குறிப்பிட்டீர்கள் அதை ஏற்கிறீர்களா?**

பதில்: அனைவரையும் சொல்லவில்லை. தனிப்பெருந்தவைர் சம்பந்தன் ஐயா இவ்வளவுவயதாகியும் நிலைதடுமாறவில்லை. ஆறிலும் சாவு நூறிலும் சாவு தாயகம் காப்பது கடமையடா என்ற எம்.ஜி.ஆர் தமிழகத்தை ஆளவில்லையா? தலைவர்கள் அப்படி மக்களுக்காக வாழவேண்டும்.

**நேர்காணல்: வேதசகா**

# தமிழர் தரப்புக்கள் ஓரணியில் செயற்பட வேண்டும்

## முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சோ.புஸ்பராசா



**2008 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணசபை உருவாகியபோது உறுப்பினராக இருந்தீர்கள் அந்தக் கால நிலைமைகள் எவ்வாறு இருந்தன?**

தமிழர் ஒருவர் முதலமைச்சராக வரவேண்டும் என்கின்ற எண்ணம் ஒவ்வொரு தமிழருக்கும் இருக்க வேண்டும் ஆனால் துர்ரதிஷ்ட்டம் அந்த தேர்தலில் மக்களின் வாக்களிப்பு வீதம் மிகக்குறைவாக இருந்தது.

அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட்டிருக்கவில்லை தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி அப்போதைய ஆளும் அரசுடன் இணைந்து போட்டியிட்டிருந்தது ஆனால் ஆட்சியமைக்க 20 ஆசனங்கள் தேவையாக இருந்தும் அம்பாறை மாவட்டத்தில் மூன்று ஆசனங்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று ஆசனங்களுமாக அறு ஆசனங்களே கிடைத்திருந்தன.

தீர்மானங்கள் நிறைவேற்ற ஆறு எண்ணிக்கை காணாது கிழக்கு மாகாணசபையில் இருக்கும் சிங்கள முஸ்லிம் சகோதர உறுப்பினர்கள் ஆதரவு வழங்க முன்வரவில்லை இதனை தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். பாரிய சவால்களுக்கு மத்தியில் தமிழரா முஸ்லிமா முதலமைச்சர் என்ற இழுபறிக்கு மத்தியில் தமிழர் ஒருவர் முதலமைச்சராக தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

ஆறு உறுப்பினர்களை வைத்துக்கொண்டுள்ள நிலையில் முதலமைச்சர் பிள்ளையான் என்ன செய்தார் என்ற கேள்வி நகைப்புக்குரியதாகும். தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சனைகளை தீர்ப்பதற்கு பெரும்பான்மை ஆதரவைக்கொண்டு தீர்மானம் நிறைவேற்ற முடியாத நிலைமையே காணப்பட்டது.

முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தான் அம்பாறைக்கு விஜயம் செய்து மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காண வந்தபோது அதே கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அம்பாறையில் தடையாக இருந்ததும் அம்பாறை மக்களுக்கு தலைகுனிவாகும்.

அதேபோன்று கருணா அம்மானும் வெளிநாட்டில் இருந்து வந்ததும் தான் அமைச்சுப்பொறுப்புக்களை ஏற்றிருந்தாலும் அவரும் முதலமைச்சரை வசைபாடிக்கொண்டு கட்சியை சிதறடிக்கும் வேலைகளைத் தான் செய்திருந்தார்.

2012 ஆம் ஆண்டு தேர்தலில் த.தே.கூட்டமைப்பு பதினொரு ஆசனங்களைப்பெற்றிருந்தும் ஏழு ஆசனங்களை பெற்ற முஸ்லிம் காங்கிரசுக்கு முதலமைச்சரை விட்டுக்கொடுத்திருந்தமையும் ஒரு கறைபடிந்த சம்பவம்.

**கிழக்கு மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் தங்களின் நிலைப்பாடு என்ன?**

இந்த காலகட்டத்தில் கடந்த காலங்களில் தமிழ்த் தரப்புக்கள் விட்ட தவறுகளை உணர்ந்து யதார்த்தத்தை புரிந்துகொண்டு அனைவரும் கூட்டுப்பொறுப்புடன் ஓரணியில் செயற்பட வேண்டும்.

எமது பிரச்சனைகளுக்கு தீர்வைக்காண ஒரு தரப்பு நாடாளுமனறத்தை கருவியாக பயன்படுத்தலாம் இன்னொரு தரப்பு மாகாணசபை ஊடாக எமது மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டு அபிவிருத்தி செய்யலாம். இரண்டு தரப்புக்களுக்கிடையிலும் ஒரு புரிந்துணர்வு தேவை. நல்லாட்சி அரசாங்க காலத்தில் வடமாகாணத்தை எடுத்துக்கொண்டால் அங்கு தமிழ் அமைச்சர்களும் இருந்தார்கள் எதிர்தரப்பிலும் உறுப்பினர்கள் இருந்தார்கள் தற்போதும் அங்கு இவ்வாறான நிலைமை உள்ளது ஆனால் கிழக்கில் அவ்வாறு இல்லை வியாளேந்திரன் மட்டும் பெயரளவில் அமைச்சராக உள்ளார்.

ஆகவே கிழக்கு மாகாண தமிழ் மக்களின் நிலைமைகளை கருத்தில்கொண்டு அனைவரும் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஓரணியில் போட்டியிட்டு பிரதிநிதித்துவத்தை காப்பாற்றி; பின்னர் உரிய தரப்புக்களுடன் பேசி தங்களுடைய சமூகத்திற்கு கூட்டுப்பொறுப்புடன சேவையாற்ற வேண்டும்.

**கல்முனை வடக்கு பிரதேச செயலக தரமுயர்த்தல் கோரிக்கை விடயம் கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னர் நிறைவேற்றப்டும் என்று நினைக்கின்றீர்களா?**

மிக நீண்டகால கோரிக்கையாக காணப்படும் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரமுயர்த்தப்பட வேண்டும் என்பதன் நியாயம் தற்போதைய அரசாங்கத்திற்கும் தெரிந்த விடயமே. தேர்தல் காலங்களில் வெறும் வாக்குறுதிகளை வழங்குவதும் பின்னர் கிடப்பில் கிடப்பதுமாக மக்களை ஏமாற்றுவதும் மீண்டும் தேர்தல் வந்தால் வாக்குறுதிகளுடன் வாக்கு கேட்டு வருவதும் தொடரக்கூடாது இது எதிர்வரும் தேர்தலில் எடுபடாது. இந்த அரசாங்கமும் இந்த தவறை செய்யக்கூடாது. வாக்குறுதியளித்ததன்படி எதிர்வரும் கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்கிடையில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை அரசு தரமுயர்த்த வேண்டும். கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்கிடையில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை இந்த அரசாங்கம் தரமுயத்தினால் அம்பாறை மாவட்ட மக்களுடன் இணைந்து அரசுக்கு முழுமையான ஆதரவை வழங்க நான் தயாராகவுள்ளேன்.

**எதிர்வரும் தேர்தலில் முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலா தாங்கள் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடவுள்ளீர்கள்?**

நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் வெற்றியடைய வேண்டும் என அம்பாறை மாவட்டத்திலுள்ள மக்கள் எதிர்பார்த்திருந்திருந்தனர். புத்திஜீவிகளும் கூடி அவரின் வெற்றிக்காக அங்கிகாரத்தையும் வாழ்த்துக்களையும் தெரிவித்திருந்திருந்தனர்.

ஆனால் அவர் விடுதலை செய்யப்பிட்ட பின்னர் அம்பாறையில் பல பிரச்சனைகள் தீர்க்கப்படாமல் இருந்தாலும் மட்டக்களப்பு மாவட்டத;தில் இருந்து நல்லெண்ண அடிப்படையில் அம்பாறை மாவட்டத்திற்கு வருகை தராமலிருப்பது அவரது தவறு.

கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி பலமான அமைப்பாக இருக்கின்றது ஆனால் பரந்துபட்ட செயற்பாடுகளில் இதுவரை எதுவும் முன்னெடுக்கப்படவில்லை மற்றது கடந்த காலத்தில் சிவநேசதுரை சந்திரகாந்தன் முதலமைச்சராக இருந்த போது அவரது ஆட்சியில் நானும் உறுப்பினராக இருந்தேன் அந்த காலத்தில் அவர் அம்பாறை மாவட்டத்திற்கு வருவதற்கு கூட அவருடன் சேர்ந்து செயற்பட்ட ஒரு தரப்பினர் முட்டுக்கட்டையாக இருந்தார்கள். குறித்த தரப்பு எதிர்வரும் தேர்தலில் த.ம.வி.பு.கட்சியுடன் சேர்ந்து செயற்படவுள்ளதாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெவிக்கின்றது இதற்கு சிவநேசதுரை சந்திரகாந்தன் அவர்கள் எந்த பதிலும் வழங்கவில்லை.

அரசாங்கத்துடன் பயணிக்கும் த.ம.வி.புலிகள் கட்சியிடம் இருந்து கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயம் தொடர்பில் இதுவரை ஒரு ஆக்கபூர்வமான பதிலும் இல்லாமலிருப்பதாலும் அவர்களுடன் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக நான் மீள் பரிசீலனை செய்வேன்.

**நேர்காணல்:- கேதீஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேர்காணல் : கிரிஷாந்த்

# பெண் ஆளுமை

## தேஜல் வாஸா

**சமூக** நலன்மிக்கவர்கள் நம் மத்தியில் இன்னும் வாழ்ந்துக் கொண்டுதான் இருக்கின்றனர். இந்தியாவின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று சமூக நலத்திட்டங்களை முன்னெடுத்து வறியவர்களுக்கு உதவி செய்யும்ஒருவரை நேர்காணும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தது. இவர்ஒரு பெண்ணாக இருந்தாலும் மிகவும் முனைப்புடன் தைரியமாக இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் தனது பணியை முன்னெடுத்து வருகின்றார். அத்துடன் இவர் ஒரு தலைமைத்துவ பயிற்சியாளராகவும் இருக்கின்றார். அத்துடன் வட இந்தியாவின் சில விளம்பர படங்களையும் இவர் தயாரித்துள்ளார். தலைமைத்துவ ஆளுமை மிக்க பெண்ணான தேஜல் வாஸாவுடனான ஒரு நேர்காணலே இதுவாகும்.

**? கேள்வி: நீங்கள் மிகவும் தைரியம் மிக்க பெண்ணாக சமூக அமைப்புக்களின் ஊடாக பல சமூக நலத்திட்டங்களை அமுல் படுத்தி வருகின்றீர்கள். உங்களைப் பற்றிய ஒரு சிறு அறிமுகம் ஒன்றைத் தாருங்கள்?**

ஹை உங்க எல்லாருக்கும் வந்தனங்கள்!

நான் பெண்கள் மற்றும் வறியவர்களின் வாழ்க்கைக்குத் தேவையான சக்தியையும் பயிற்சியையும் அளிக்கிற முன்னணி பயிற்;சி வழுங்குனரும் ஆவேன். தொழில் ரீதியாக கல்வித்துறைக்கு ஊக்கமளிக்கும் பேச்சாளராகவும் பயிற்சியாளனாகவும் கடமையாற்றுகிறேன். என்னுடைய சொந்த நிறுவனத்தின் மூலம் கல்வித்துறைக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் கடந்த 15 வருடங்களாக கடமையாற்றுகிறேன். ஜேட் எயர் வேய்ஸில் துணை முகாமையாளராகவும் கடமையாற்றியுள்ளேன். 2012 தொடக்கம் என்னுடைய சொந்த முயற்சிகளை ஆரம்பித்தேன்.

பல கல்வி நிறுவனங்கள் கல்லூரிகளின் ஒத்துழைப்போடு செயலாற்றியுள்ளேன். மனதிலும் எண்ணங்களிலும் தடுமாறுபவர்களக்கு நான் கவுன்ஸிலிங் மற்றும் மன பயிற்சிகளையம் வழங்ககிறேன்.. நான் திறன் அபிவிருத்தித் திணைக்களத்திலும்கடமையாற்றியள்ளேன். இது மத்திய அரசின் அபிவிருத்தி திட்டமாகும். மனித நல முதல் அடித்தளமான சில அரசசார்பற்ற (NGO) துறைகளோடும் நான் நிறைவேற்று தணை தலைவராகவும் கடமையாற்றியள்ளேன். நான் பெண் வன்முறைகளுக்கு எதிராகவும் சிறுவர்களுக்காகவும் அதிகளவில் செயற்பட்டுள்ளோம். இது என்னைப் பற்றிய சிறு சுருக்கமாகும்.

எனவே சமூகநலத்திட்டங்கள் மூலம் நாம் அதிகளவிலான நிகழ்சித்திட்டங்களையும் பயிற்சி நெறிகளையும் பெண்களுக்காகவும், ஆசிரியர்களுக்காகவும், குழந்தைகளுக்காகவும், பெண் வன்முறைகளுக்கெதிராகவும். இல்லத்தரசிகளுக்காகவும் மற்றும் கல்லூரி மாணவர்களுக்காகவும் நடாத்துகின்றோம். சமூக நலன் திட்டங்களில் அதிகளவில் வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்து அவர்களது பயத்திலிருந்து அவர்களை வெளிக்கொணரவும் சிறந்த அனுபவங்க



ளையும் கவுன்ஸிலிங் மற்றும் தெரபீஸ் ஆகியவற்றை அவர்களுக்கு வழங்குகின்றோம்

**? கேள்வி:உலகின் பின்தங்கிய பகுதிகளில் உள்ள பெண்கள் மற்றும் சிறுவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நீங்கள் முன்வைக்கும் திட்டம் என்ன?**

பின்தங்கிய பகுதிகளிலுள்ள பெண்களின் வாழ்க்கையை மேம்படுத்துவது மிக இலகுவானதும் தெளிவானதுமாகும். இதற்கு கல்வியும் விழிப்புணர்வும் மிக முக்கியமானது. இவை இரண்டுமில்லாமல் சமூகத்தில் ஒன்றையும் மாற்ற முடியாது. மனிதர்கள் ஒரு பொம்மையைப் போல் வேலை செய்கிறார்கள். நாம் எதைப்பார்த்தாலும் ஏற்றுக்கொண்டு பின்பற்றுகிறோம். ஆனால் நாம் சரியான கல்வி, சரியான விழிப்புணர்வு மற்றும் சரியான தீர்மானத்தை எடுப்போமாயின் எந்தவொரு மனிதனாலேயும் சரித்திரம் படைக்க முடியும். பெண்கள் எப்போதுமே சக்திமிக்கவர்களும் வலிமை மிக்கவர்களுமாவர். அவர்கள் எல்லாரையும் விட பலம் பொருந்தியவர்கள். நான் சொல்கிறேன் இதற்கு காரணம் என்னவென்றால் பெண்கள் மன வலிமை மிக்கவர்கள். பின் தங்கிய பகுதிகளில் உள்ள பிரச்சினை அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு கருவியையோ வசதியையோ எம்மால் காணமுடியவில்லை. தற்போது இந்நாட்களில் எல்லாமே டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளது. கல்வி அத்தியவசியமானது என்று கூறுவேன். எனவே வறுமைக் கொட்டிற்கு கீழ் வாழும் பெண்களுக்கான கல்வியையம் விழிப்புணர்வையும் திட்டமிடுங்கள். அறிவும் பலமும் அவர்களுக்ளேயே இருக்கிறது. எமக்குத் தேவையான ஒன்றே ஒன்று அவர்களை ஊக்கப்படுத்த யாராவது வேண்டும். இதைப்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் கல்வி அறிவை ஊட்டுவதற்கும் யாரேனும் வேண்டும். இயன்றளவு இந்த விழிப்புணர்வை சாதகமான முறையில் பரப்புவதன் மூலம் அவர்கள் அவர்களின் சொந்தக் காலில் நிற்க முடியும். ஒரு கல்விமான் 10 பேருக்கு கல்வியை புகட்ட முடியும். 10 பேர் இன்னும் 100 பேருக்கு கல்வியை புகட்டுவதோடு அந்தச் சங்கிலி தொடர்ந்து கொண்டே இருக்கும். என் தாயார் கல்விமானாக இருந்தால் மாத்திரமே எனக்கும் கல்வி புகட்ட முடியும். அவர்கள் எனக்கு நல்ல நெறிமுறைகள், மதிப்புகள் மற்றும் வழிமுறைகளை கற்பிக்க முடியும்.

**? கேள்வி: தனிநபர் ஆளுமை என்பது என்ன?**

ஆளுமை என்பது உங்களைப் பற்றியது மற்றும் அந்த நபரின் முழுமையான ஆளுமை பற்றியது. அபிவிருத்தி என்பது நீங்கள் என்ன நினைக்கிறீர்கள். நீங்கள் எவ்வாறு பரிமாறிக்கொள்கிறீடகள். நிலைமைக்கு எவ்வாறு பொறுக்கூறுகிறீர்கள், எவ்வாறு போலியாக நடிக்கிறீடகள் பேசகிறீடகள் என்பதைப் பொறுத்தது. நாம் நினைப்பதை கொண்டே நாம் முன்னேறுகிறோம். அடிப்படையில் எம் ஒவ்வொருவரிலும் ஒரு கரும் புள்ளி உண்டு.



ஏனையவர்கள் பார்ப்பவற்றில் குறிப்பிட்ட சிலவற்றை சிலரால் பார்க்க முடிவதில்லை. நாம் சில உளவியல் சோதனைகள் , திரெப்ஸிஸ் மூலமான கவுன்சில்கள், பயிற்சிப்பட்டறைகள, கருத்தரங்குகள், ஒன்றுக்கு ஒன்று தகவல் தொடர்பு, வகுப்பறை பயிற்சிகள் போன்றவற்றை நாம் செய்கிறோம். நாம் அவர்களது ஆளுமையை உணர்ந்தறியச் செய்ய, அவர்களின் வாழ்க்கை முறைக்கு எற்றவாறு மனநிலையை மாற்றியமைத்தல், அவர்களின் மனநிலையை எவ்வாறு புரிந்து கொள்வது, தேவைகள் மற்றும் தேவைக்குரியவை, நன்மை தீமைகள் மற்றும் எவ்வாறு தம்மைத் தாமே விருத்தி செய்து கொள்வதுபோன்றவற்றிற்காக முயற்சிகளை மேற்கொள்கிறொம். எனவே இவை அனுபவத்தினூடாகவும் தொழில் நுட்பத்தினூடாகவும் பல்வேறு கற்கைகளினூடாகவும் பெறப்படுகின்றது.

**? கேள்வி: நீங்கள் விளம்பர படங்களையும் தயாரித்துள்ளீர்கள். அது பற்றி கூறுங்கள்?**

நான் சில விளம்பரப்படங்களை உருவாக்கியுள்ளேன். நான் விளம்பர குறுந் திரைப்படங்களை விரும்புகிறேன். எதிர்காலத்தில் நான் இதை விஸ்தரிக்க விரும்பகிறேன் ஏனெனில் அவை ஒரு வகையான படைப்பு அத் துறையில் அதிகளவில் நான் செயற்படாவிட்டாலும் அத்துறையிலள்ள நடிப்பு , விளம்பரம் மற்றும் தொலைக்காட்சி தொடர் போன்றவற்றில் பங்கெடுக்க விரும்புகிறேன்.படைப்புக்கான பகுதியில் கடமையாற்ற விரும்புகிறேன்.

# மங்கையர் பக்கம்

Dr.புஸ்பலதா லோகநாதன்.
ஜெனிற்றா மோகன்
Jenikabishan@gmail.

## பால்நிலை சமத்துவம்

**ஒரு** பறவை பறப்பதற்கு இரண்டு சிறகுகள் அவசியம். அதுபோல் ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு ஆண், பெண் இருபாலரும் முகவும் அவசியமானவர்கள். எனவே பால்நிலை சமத்துவத்துடன் சமூகமயமாக்கப்படவேண்டும்

பால் என்பது ஆண்,பெண்,இடைப்பாலினம் என மூன்று உள்ளன. இது இயற்கையானது. உயிரியல் அடிப்படையானவை. மாற்ற முடியாதது.

பால்நிலை என்பது ஆண் என்றால் இப்படி இருக்க வேண்டும், பெண் என்றால் இப்படி இருக்க வேண்டும் என சமூகத்தால் ஏற்படுத்தப்பட்டது.

இது செயற்கையானது. மாற்றக்க்கூடியவை.

ஒரு குடும்பம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்றால் அங்கு பால்நிலை சமத்துவம் பேணப்படவேண்டும். பலர் இதனை தவறாக நோக்குகின்றனர். பெண்ணிலை வாதம் என நினைக்கின்றனர். பெண்கள் ஆண்களை அடக்க நினைப்பதாக எல்லாம் தவறாக பார்க்கின்றனர். ஆனால் பால்நிலை சமத்துவத்தை இந்துமதம் அர்த்தநாரீசுவரர் வடிவத்தில் எப்பவோ எமக்கு பிரதிபலித்துவிட்டது. இதனை சரியாக விளங்கிய குடும்பங்கள் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளன.

சான் பிள்ளை என்றாலும் ஆண பிள்ளை, ஒரு மனைவியின் சுதந்திரம் கணவனின் காலடியில்,பெட்டைக்கோழி கூவி பொழுது விடியாது,பொம்பிள சிரிச்சா போச்சி புகையில விரிச்சா போல, அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு போன்ற பழமொழிகள் மூலம் ஆண்களை உயர்வாகவும் பெண்களை ஆண்களை விட தாழ்வாகவும் சமூகமயமாக்கிவிட்டனர். அதனால் பெண்களுக்கெதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளதன. வீட்டு வன்முறை 60% இடம்பெறுகின்றன.

எனவே ஆணாதிக்கமற்ற பால்நிலை சமத்துவம் ஏற்படும் போது குடும்பங்களும் மகிழ்ச்சியாக இருக்கும். பெண்களுக்கெதிரான வன்முறை களும் குறைக்கப்படும்.எனவே கருவிலிருந்து ஊட்டப்படுகின்ற ஆண், பெண் பாரபட்சம் நீக்கப்பட்டு சமத்துவ நோக்கத்தோடு பிள்ளைகள் வளர்க்கப்படவேண்டும்.

# பெண் தலை நிமிர...

**மாதராய்ப்** பிறந்திட மாதவம் செய்திட வேண்டுமம்மா. அனைத்துப் பெண்களும் ஆனந்தப்பட்டுக் கொள்ளலாம்.ஆனந்தப்படும் நிலையில் அனைத்துப் பெண்களின் வாழ்வியல் இருக்கின்றதா எனும் கேள்விக்குப் பதில் இல்லை என்பது தான்.

பெண்ணிலைவாதம் மேலோங்கியுள்ள ஒரு காலகட்டத்தில் நாம் நின்று கொண்டிருக்கின்றோம்.பெண்களுக்கு மறுதலிக்கப்பட்ட உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றோம்.ஆனாலும் போராட்டங்களாலும் உரிமைக் குரல்களாலும் மட்டுமே எமது சுய உரிமைகள் கிடைத்துவிடப் போவதில்லை.அடுப்பூதிக் கொண்டு எமக்கப்பால் என்ன நடக்கின்றது எனப் புரியாமலும் வாழ்ந்து விடுவது இலகுதான்.ஆனாலும் இனிவரும் தலைமுறைக்கான விழிப்புணர்வை நாமே உருவாக்கிக் கொள்ள வேண்டும்.எமக்கான தொடர் பயணத்தை நாமே நடந்தாக வேண்டும்.

அடக்கியாளப்படும் பெண்கள் தாமாக விழித்துக் கொள்ள வேண்டும்.



காலை தொடங்கி படுக்கைக்குப் போகும் வரை பம்பரமாய்ச் சுழலும் ஒரு குடும்பத்தின் முழுத் தேவைகளையும் தனியாளாய்ச் சுமக்கும் பெண்களின் உழைப்பு கூர்ந்து கவனிக்கப்படுவதேயில்லை.

யாவரும் கடந்து போய்க் கொண்டே இருப்பார்கள் .கவனத்திற்குரிய பெண்களாய் நாம் மாற எம் ஆளுமைகள் வளர்க்கப்பட வேண்டும்.

போரின் பின்னரான காலப்பகுதியில் பல பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் எம்முன் உருவாகி நிற்கின்றன. இவளால் என்ன செய்ய முடியும்? இந்தக் குடும்பம் தலை தூக்குமா? எனக் கேள்வி கேட்டவர்களின் புருவங்கள் உயர இன்று பல குடும்பங்கள் பெண் வழிகாட்டலில் முன்னேறியுள்ளன.யாருக்கும் பாரமாகாது தாமே சுமை தாங்கிகளாய் பல பெண்கள் இன்று தலை நிமிர்ந்திருக்கின்றார்கள்.

இந்த உந்துதலின் அடி நாதம் எதுவெனத் திரும்பிப் பார்க்கையில் கல்விதான் அது

**''கற்கை நன்றே கற்கை நன்றே**
**பிச்சை புகினும் கற்கை நன்றே''**

என்பதற்கிணங்க எமக்கான அடிப்படை ஆதாரம் கல்விதான்.பெண்களாகிய நாம் கொண்டாடப்பட வேண்டுமென்றால்இ எம் வாழ்க்கையை யதார்த்தத்தில் நியாயமாக நாம் வாழ்ந்து விட வேண்டும் என்றால் அதன் ஆதாரம் கல்வி.

எமக்கான ஒளியுள்ள வாழ்வின் வானவெளியின் எல்லைகளைத் தொட்டுவிட எம் சிறகினை அசைத்துப் பறக்க கல்வியைத் தொடர்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மியன்மாரில் மீண்டும் இராணுவ ஆட்சி ஆங்சாங் சூகிக்கு என்ன நடந்தது?



## உலக வலம்

சபா தயாபரன்
sabathayaparan@gmail.com

மியான்மரில் கடந்த திங்கட்கிழமை பெப்ரவரி முதலாந்திகதி ராணுவத்தினரால் ஆங் சாங் சூகியின் தேசிய ஜனநாயக் லீக் கட்சியினர் ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தப்பட்டு ஒரு வருட காலத்திற்கு அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆங் சாங் சூகி உட்பட முக்கிய உயர்மட்ட அரசு அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்கு காவலில் வைக்கப்பட்டுள்ளனர் திங்களன்று நாடாளுமன்றம் கூடவிருந்த வேளையில்தான் இந்த ஆட்சிக் கவிழ்ப்பு நடந்திருக்கிறது. இந்த ஆட்சிக் கவிழ்ப்புக்கு ராணுவம் சொல்லும் காரணம், தேர்தலில் முறைகேடுகள் நடந்தது என்பதுதான்.

ராணுவத்தினாரால் நடத்தப்படுகின்ற ஒரு தொலைக்காட்சி ஒளிபரப்பில் இராணுவம் ஆயுதப்படைகளின் தளபதி ஜெனரல் மிங் ஆங் லெய்ங்கிடம் அதிகாரம் ஒப்படைக் கப்பட்டுள்ளதாகவும், ஒரு வருடத்திற்கு தேசிய அவசரகால நிலையை அறிவிப்பதாகவும் அறிவித்தது.

மேலும் அது தெரிவிக்கையில் அரசாங்கத்திலிருந்து 24 அமைச்சர்களும் அவர்களின் பிரதிநிதிகளும் நீக்கப்படுவதாகவும் அவர்களுக்குப் பதிலாக 11 ராணுவ அதிகாரிகள் ராணுவ நிர்வாகத்தில் பதவிகளை ஏற்பார்கள் என்றும் கூறியது.

கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஆங் சாங் சூகியின் தேசிய ஜனநாயக் லீக் கட்சியும் இராணுவ ஆதரவுடைய யூனியன் ஒற்றுமை மேம்பாட்டுக் கட்சியும் போட்டியிட்டன. இதில் ஆங் சாங் சூகியின் கட்சி 83 சதவிகித வாக்குகளை பெற்று அதாவது 476 இடங்களில் 396 பெரும்பான்மையை வென்றது . மற்றும் இராணுவ சார்பு கட்சி 33 இடங்களை மட்டுமே வென்றது. சர்வதேச பார்வையாளர்கள் இராணுவ புகார்களை நிராகரித்துள்ளனர். .

இந்த நிலையிலேயே ஆளும் அரசாங்கத்திற்கும் டாட்மாடா என்று அழைக்கப்படும் இராணுவத்திற்கும் இடையில் பல மாதங்களாக ஏற்பட்டிருந்த முறுகல் நிலை திங்களன்று நடந்த சதித்திட்டத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட ஆட்சிக் கவிழ்ப்பு மூலம் ஒரு முடிவு நிலைக்கு வந்திருக்கிறது என்றே ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.



இப்போது மியன்மாரின் மிகவும் பெரிதான யாங்கோன் நகரம் உட்பட எல்லா நகரங்களிலும் ராணுவம் குவிக்கப்பட்டு ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதாக செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இணையம் மற்றும் தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது. தொலைக்காட்சி நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. ராணுவத்திற்கு சொந்தமான தொலைக்காட்சிகளை மட்டுமே மக்கள் பார்க்க முடியும்.மக்கள் ஒருவித அச்சத்திலேயே இருப்பதாக கூறப்படுகிறது.

யார் இந்த ஆங் சாங் சூகி...? இவர் ஒரு காலத்தில் சமாதானப் புறாவாக உலக அரங்கில் வலம் வந்தவர்.மியன்மாரில் இராணுவ அடக்கு முறைக்கெதிராக அவர் போராடியவர். 1988ம் ஆண்டு மியான்மரில் நடைபெற்ற போராட்டத்தில் பாதுகாப்புப் படைதனது அடக்குமுறையை காட்டியது, பலர் கொல்லப்பட்டனர். 1989ம் ஆண்டு ஆங் சாங் சூகி வீட்டுச்சிறையில் வைக்கப்பட்டார். இதனால் 15 ஆண்டுகள் ராணுவக் காவலில் இருந்தார்.இவருக்கு 1991ம் ஆண்டு நோபல் பரிசும் வழங்கப்பட்டிருக்கிறது. . 2010 அளவில் அவர் விடுவிக்கப்பட்ட்டபோது உலகமே அவரைக் கொண்டாடியது. அதன் பிறகு 5 வருடம் கழித்து நடந்த தேர்தலில் வெற்றியும் பெற்றார். இதனால் 50 வருட மியன்மாரின் ராணுவ ஆட்சி ஒரு முடிவுக்கு வந்தது. இந்த ஜனநாயக ஆட்சி மலர்ந்ததின் முக்கிய தருணத்தை மேற்கத்திய நாடுகள் பாராட்டின .

சூகியின் தேர்தலில் வெற்றி பெற்றாலும் மியன்மார் அரசியல் அமைப்பின் விதிகளின்படி சூகியால் நாட்டின் அதிபராக பதவியேற்க முடியவில்லை. ஆனாலும் , மியான்மர் நாட்டின் தலைமை ஆலோசகரானார். அவர் அரசமைப்புப்படி அதிபராகச் செயல்படவில்லை என்றாலும், மியான்மரின் உயரிய தலைவராகவே செயல்பட்டு வந்தார்என்பது குறிப்பிடத்தக்கது.

சூகியின் கட்சி ஆட்சியில் இருந்தாலும்,முக்கிய அமைச்சரவையின் பொறுப்புகளும் மற்றும் மியான்மர் அரசமைப்புப்படி, நாடாளுமன்றத்தில் கால் பங்கு எண்ணிக்கை ராணுவத்தினருக்கானதாகவே இருந்தன. இதனால் அவர் தன்னிச்சையான முடிவுகள் எடுப்பதில் சிக்கல்கள் இருந்தன.

அவரிடம் ஜனநாயக சார்பு சிந்தனைகள் இருந்தபோதிலும், சூகி 2015 க்குப் பிறகு இராணுவத்துடன் இணைந்து பணியாற்ற வேண்டிய கட்டத்திலேயே இருந்தார் . சில விஷயங்களில் அவரது இராணுவ சார்பு அவரது சர்வதேச ஆதரவாளர்களின் வெறுப்புக்கும் ஆளானார்.

2019 ஆம் ஆண்டில்,பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கை என்று கூறப்பட்டு மியான்மர் ராணுவத் துருப்புக்களால் நாட்டின் ரோஹிங்கியா முஸ்லீம் சிறுபான்மை மக்களுக்கெதிராக ஒரு இனப்படுகொலையே நடந்தது . சிறுபான்மை முஸ்லீம் மக்கள் பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்யப்பட்டனர். ராணுவத்தினரின் இந்த அட்டூழியங்களுக்கு எதிராக பேசத் தவறியதற்காக சூகி சர்வதேச அளவில் விமர்சிக்கப்படடார் . இனப்படுகொலை குற்றச்சாட்டுகளுக்கு எதிராக மியான்மரின் தளபதிகளை அவர் ஆதரித்ததாக அவர் மீது பலத்த குற்றச் சாட்டுக்கள் எழுந்தன. இதற்கு ஐ.நாவும் கண்டனம் தெரிவித்திருந்தது.

ரோஹிங்கியாக்களுக்கு எதிரான வன்முறையில் மியான்மரின் இராணுவத்தின் பங்கைக் கருத்தில் கொண்டு, நாட்டில் சிறுபான்மையின மக்கள் பரவலான அச்சங்கள் எட்டப்பட்டிருக்கின்றன. சூகி ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதும், மனித உரிமைகள் குழுக்கள் சுமார் 1.5 மில்லியன் இன சிறுபான்மை வாக்காளர்கள் நவம்பர் 2020 தேர்தலில் இருந்து விலக்கப்பட்டுள்ளதாகக் கூறினர்.

மியன்மார் நாட்டை தற்போது ஆயுதங்களே ஆட்சி செலுத்தி கொண்டிருக்கின்றன. கொடிய கொரோனா வைரஸ் தொற்று நோய்க்கு மத்தியில் மில்லியன் கணக்கான மக்கள் இறந்து கொண்டும் வறுமையில் வாடிக் கொண்டும் இருக்கும் இந்த நிலையில் மியன்மாருக்கு இப்போது தேவை கொரோனா தடுப்பூசிகளும் மற்றும் சமமான பொருளாதார மீட்சியுமே ஒழிய ஆட்சி மாற்றம் அல்ல.

# மீண்டும் சிக்கலில் ட்ரம்ப்



அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜோ பைடன் வெற்றி பெற்றதை அடுத்து கடந்த ஆட்சியில் ட்ரம்ப்பி னால் மேற்கொண்ட பல நடவடிக்கைகளை பைடன் தற்போது ரத்து செய்து வருகிறார்.

இந்நிலையில் ட்ரம்ப் மோசடி வழக்கில் விசாரணை மேற்கொள்ளும் சட்ட அதிகாரிகளுக்கு ஒழுங்காக ஒத்துழைக்கும்படி டொனால்ட் ட்ரம்புக்கு நியூ யார்க் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதனால், ட்ரம்ப் மீதான சட்ட அழுத்தம். அதிகரித்துள்ளது.

நியூயோர்க் நீதிபதி எங்கோரன் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ஜே. ட்ரம்ப்பின் குடும்ப வணிகம் மற்றும் அவரின் பங்குதாரர்கள் மீது கடுமையான கட்டுப்பாடுகளை அதிகரித்தார், வங்கி கடன்கள் மற்றும் வரி சலுகைகளைப் பெறுவதற்காக நிறுவனம் சொத்துக்களை தவறாக கணக்கு காட்டினாரா என்பது குறித்த சிவில் விசாரணையில் அரசு புலனாய்வாளர்களுக்கு ஆவணங்களை வழங்குமாறு உத்தரவிட்டார்.

இது குறித்த வழக்கு மான்ஹாட்டனில் உள்ள மாகாண உச்ச நீதிமன்றத்தில் விசாரணையில் இருக்கிறது.

ட்ரம்பின் சொத்துகள் தொடர்பான ஆவணங்களை அவரது வழக்கறிஞர்கள் நீண்ட நாட்களாக மறைக்க முயற்சித்து வரும் நிலையில், சம்பந்தப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது மட்டுமல்ல ட்ரம்பின் வழக்கறிஞர்கள் இந்த வழக்கு சம்பந்தமான டிரம்ப் அமைப்பால் பணியமர்த்தப்பட்ட ஒரு சட்ட நிறுவனத்துடனான தகவல்தொடர்புகளும் செல்வி ஜேம்ஸ் அலுவலகத்தில் சமர்ப்பிக்கும்படியும் நீதிபதி எங்கோரன் உத்தரவிட்டார்.


இப்படியான தொடர் அழுத்தங்களால்டிராம் தரப்பில் அதிர்ச்சியில் மூழ்கியுள்ளதாக அறியப்படுகிறது .

கடந்த 2019ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்த குற்ற முதல் விசாரணை தொடங்கி விட்டது. எனினும், கடந்த டிசம்பர் மாதம் முதல் வழக்கு சூடுபிடித்துள்ளது.

## கட்டாரில் வீட்டு தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய மேலும் 6 பேர் கைது!

கட்டார் நாட்டில் வீட்டு தனிமைப்படுத்தல் விதிகளை மீறியதன் காரணமாக மேலும் ஆறு நபர்களை அதிகாரிகள் கைது செய்துள்ளதாக கட்டார் செய்தி ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

கொரோனா வைரஸ் (covid 19) மக்களிடையே பரவுவதை கட்டுப்படுத்த கட்டார் அரசாங்கம் முயற்சித்து வரும் வேளையில், அரசாங்கத்தின் உத்தரவுகளை சிலர் மீறி, பொது சுகாதாரத்திற்கும், பாதுகாப்பிற்கும் ஆபத்தை ஏற்படுத்தி வருகின்றனர் என்பதாக கூறப்பட்டுள்ளது.




## குவைத்தில் கைவிடப்பட்டுள்ள இலங்கை பணிப் பெண்கள்

இலங்கைக்கு அந்நிய செலாவணியை பெற்றுக்கொடுக்கும் பணிப் பெண்கள் இலங்கை திரும்ப முடியாமல் அவதிப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கவனிப்பாரற்ற நிலையில் கொரோனாவினால் தொழில் வாய்ப்பை சொந்த நாட்டிற்கு செல்லமுடியாமல் பல நாட்களாக அகதியை போல் வெளிநாட்டு தூதரகங்களுக்கு முன்னால் காத்துக்கிடப்பதாக அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனினும், குவைத்திற்கான இலங்கை தூதரகம் இவர்களை கண்டுகொள்ளாது, கைவிட்டு இருப்பதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.



இலங்கையின் பொருளாதாரத்தின் முக்கிய பங்காளிகளான வெளிநாட்டு வீட்டுப் பணிப் பெண்களின் இந்த நிலை கவலையளிப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எனது வாழ்க்கையை திரைப்படமாக எடுக்க விரும்புகிறார்கள்

## வேகப்பந்து வீச்சாளர் நடராஜன்

**'எனது** வாழ்க்கையைத் திரைப் படமாக எடுக்க விரும்புகிறார்கள் என இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் டி.நடராஜன் தெரிவித்தார்.

சமீபத்தில் நடைபெற்ற அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் இந்திய அணியினருடன் வலைப்பயிற்சி பந்து வீச்சாளராகச் சென்ற இடக்கை வேகப்பந்து வீச்சாளர் டி.நடராஜன்.

தமிழகத்தை சேர்ந்த அவர் அந்த தொடரில் ஒருநாள் 20 ஓவர் டெஸ்ட் போட்டியில் அறிமுக வீரராக களம் கண்டதுடன் பந்து வீச்சில் சிறப்பான பங்களிப்பை அளித்து அனைவரின் கவனத்தையும் கவர்ந்தார்.

இந் நிலையில் 29 வயதான நடராஜன் ஊடகமொன்றுக்கு அண்மையில் செவ்வியொன்றினை அளித்திருந்தார்.

குறித்த செவ்வியில் 'ஐ.பி.எல். போட்டியிலிருந்து கடந்த 6 மாதம் ஓய்வு இல்லாமல் விளையாடி இருக்கிறேன். தற்போது எனக்கு இந்திய கிரிக்கெட் சபை சில நாட்கள் ஓய்வு கொடுத்தார்கள்.

எனது உடல் வலிமையில் ஏற்றம் காண என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து இந்திய கிரிக்கெட் சபை எனக்கு ஆலோசனை வழங்கி இருக்கிறது.

அடுத்த 3 வாரம் என்ன பயிற்சி செய்ய வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். அதனை செய்ய இருக்கிறேன்.

ஐ.பி.எல். போட்டி முதல் அவுஸ்திரேலிய தொடரில் ஒருநாள் மற்றும் 20 ஓவர் போட்டி வரையில் மணிக்கு 135 கிலோ மீற்றர் வேகத்தில் பந்து வீசினேன். ஆனால் டெஸ்டில் எனது பந்து வீச்சு வேகம் குறைந்து விட்டது.

எனது உடல் வலிமை குறைந்தது இதற்கு காரணமாக இருக்கலாம். விஜய் ஹசாரே கோப்பை போட்டியில் இந்திய கிரிக்கெட் சபை அனுமதி அளித்தால் தமிழக அணிக்காக விளையாடுவேன். இந்திய கிரிக்கெட் சபை அனுமதி கிடைக்காததால் சையது முஷ்டாக் அலி கோப்பை போட்டியில் விளையாடவில்லை. ஐ.பி.எல். போட்டிக்கு முன்பு விராட்கோலி டிவில்லியர்ஸ் டோனி போன்ற வீரர்களின் விக்கெட்டை வீழ்த்த வேண்டும் என்பது கனவாக இருந்தது. அவர்களது விக்கெட்டை கைப்பற்றியது மிகுந்த மகிழ்ச்சி அளித்தது.




அதனை நினைத்து பார்க்கையில் பல நாட்கள் தூக்கம் வந்ததில்லை. ஆஸ்திரேலிய தொடர் முடிந்து வந்த பிறகு இன்னும் கூட ரசிகர்கள் பலர் என்னை பார்க்க வீட்டுக்கு வருகிறார்கள். அது மகிழ்ச்சியாக இருந்தாலும் வித்தியாசமான அனுபவமாகவுள்ளது.

நான் எப்பொழுதும் சாதாரணமான மனிதனாக இருக்கவே விரும்புகிறேன். எனது வாழ்க்கையை சினிமா படமாக எடுக்க டைரக்டர்கள் சிலர் சந்திக்க வீடு தேடி வந்தனர். ஆனால் இப்போது எனக்கு அதில் ஆர்வம் இல்லை. கிரிக்கெட்டில் முழு கவனத்தையும் செலுத்தவே விரும்புகிறேன்.

2015ம் ஆண்டில் எனது பந்து வீச்சு சந்தேகத்துக்குள்ளாகி தடை விதிக்கப்பட்ட போது வாழ்க்கையே முடிந்து விட்டது என்று நினைத்தேன். மனதளவில் வெகுவாக பாதிக்கப்பட்டேன். அப்போது எனக்கு நண்பர்களும் பயிற்சியாளர்களும் உத்வேகம் அளித்தனர். தமிழக அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் சுனில் சுப்பிரமணியம் எனது பந்து வீச்சை சரி செய்ய உதவிகரமாக இருந்தார். அவரது அறிவுரையை பின்பற்றி கடுமையாக உழைத்தேன். அதற்கு நல்ல பலன் கிடைத்தது.

மூன்று வடிவிலான (20 ஓவர் ஒருநாள் டெஸ்ட்) போட்டியிலும் தொடர்ந்து விளையாட வேண்டும் என்பதே எனது லட்சியமாகும்' இவ்வாறு தெரிவித்தார்.

---

03 ஆம் பக்கத் தொடர்ச்சி...

பழக்கப்பட்டுப் போன தமிழ் அரசியல் பாரம்பரியத்துக்குள் இருந்து அரசியலுக்குள் பிரவேசிக்கும் இவர்கள், எப்படி தமிழ் வாக்குகளை கவர்ந்திழுப்பது என்பது பற்றியே அதிகம் சிந்திக்கிறார்கள்.

வாக்குவேட்டை அரசியலுக்கான உத்திகளாகவே தமிழ் மக்களின் சமகால பிரச்சினைகள் ஒவ்வொன்றையும் கையாள்கிறார்கள். இனத்துக்காக கொஞ்சம் வலி சுமக்கவும், பாரம் தூக்கவும், சிறை செல்லவும் இங்கு எவரும் தயாராக இல்லை. அர்ப்பணிப்பான, விசுவாசமான, அரசியல் தலைமைகள் என்று எங்கள் மத்தியில் எவருமே இல்லை என்பதனை 2020ம் ஆண்டு மாவீரர் நாள் நினைவேந்தல் வாரம் உணர்த்தியிருக்கிறது. மாவீரர் நினைவேந்தல் வாரத்தில் இவர்கள் ஒரு சிட்டி விளக்கையோ அல்லது ஒரு மெழுகுதிரியையோ அதுவும் சிறீலங்கா அரசோ, அரச படைகளோ கெடுபிடிகள், நெருக்கடிகள் எதனையும் கொடுக்காமல் இருந்தால் மாத்திரம் ஏற்றத் தயாராக இருந்தார்கள்.

அந்த நினைவேந்தல் வாரத்தில் தேசத்தை பசுமையாக்கும் மரக்கன்றுகள் நடுகை செய்யும் வேலைத்திட்டத்தையோ, எங்காவது ஒரு குக்கிராமத்தில் இயங்காமல் இருக்கும் ஒரு சனசமூக நிலையம், ஒரு வாசிகசாலை, ஒரு முன்பள்ளி, ஒரு தொழில் பயிற்சி நிலையம் இவைகளை மீள இயங்கச் செய்யும் அல்லது புதிதாக ஆரம்பிக்கும் புரட்சிகர உள்ளடக்கங்களைக் கொண்ட தூர தரிசனைப் பார்வை இவர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

அரசியல் தலைமைகளாலும், கட்சிகளாலும், சிவில் சமூக அமைப்புகளாலும், விடுப்பு பார்க்கும் பெருந்திரள் மக்களாலும் போராடும் மக்கள் தனித்து விடப்பட்டுள்ளார்கள். காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு நீதி கேட்டு வவுனியாவில் சுழற்சி முறை உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தமிழர் தாயகசங்கத் தாய்மார்களின் கவனயீர்ப்பு போராட்டம் இன்றைக்கு 1400 நாட்களை கடந்து விட்டது. கடந்த ஆண்டு இறுதியில் வீசிய புரவிப்புயலால் போராட்டப் பந்தலுக்கு அருகில் இருந்த பெரிய மரம் ஒன்றின் கிளைகள் முறிந்துவிழுந்து போராட்டப் பந்தலும் சேதமடைந்திருக்கிறது. ஆனால் புயல் ஓய்ந்ததும் எந்தவொரு அரசியல்வாதியோ, கட்சியோ, இளைஞர் அணியோ, சிவில் சமூக அமைப்புகளோ உடனடியாக அந்த இடத்துக்குச் சென்று பந்தலை தாய்மார்களுக்காக திருத்திக் கொடுத்ததாக இதுவரை செய்திகள் வரவில்லை.

உண்மையில் தமிழ்த் தேசிய தரப்புகள்என்ன செய்திருக்க வேண்டும்? காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை என்பது போராடிக் கொண்டிருக்கும் பாதிக்கப்பட்ட மக்களின் தனிப்பட்ட பிரச்சினை மட்டும் கிடையாது. அது ஒட்டுமொத்த தமிழ்த் தேசிய இனத்தினதும் வாழ்வுரிமை பிரச்சினையோடு அதாவது இனப்பிரச்சினையோடு தொடர்புபட்டுள்ளது.

'சிறீலங்காவின் ஒற்றையாட்சி அதிகாரக் கட்டமைப்பை ஏற்றுக் கொண்டு சிங்கள மக்களோடு சேர்ந்து வாழமுடியாது. தமிழ் மக்கள் ஒரு தேசமாக பிரிந்து போக விரும்புகிறோம்' என்பதை அழுத்த திருத்தமாக முரசறைந்து பிரகடனப்படுத்த தமிழ்த் தரப்புக்கு இருக்கும் ஒரே துருப்புச்சீட்டு காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் மட்டுமே. தமிழ் இனப்படுகொலையின் ஒருகூறாகவும் இது அமைந்திருக்கிறது.

அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டால், ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் விடுவிக்கப்பட்டால், மீள்குடியேற்றம் பூர்த்தி செய்யப்பட்டால், நிலைமை என்னவாகும்? இந்தப் பிரச்சினைகள் எல்லாவற்றையுமே புத்தி பூர்வமான ஒரு அரச தலைவரால் ஒருநாளில் ஒரு அரசியல் தீர்மானம் மூலம் இலங்கைத்தீவுக்குள் சட்டென முடிவுக்கு கொண்டு வரமுடியும். அத்தோடு தமிழர் தரப்பின் போராடுவதற்கான அரசியல் காரணங்களையும் வலுவற்றதாக்கி விடலாம்.

ஆனால், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் என்பது அப்படியான ஒன்றல்ல. அது சிறீலங்கா அரசுக்கு எப்போதுமே பெருத்த தலையிடி கொடுத்துக் கொண்டிருக்கும் பிரச்சினை. கடத்தப்பட்ட, கையளிக்கப்பட்ட, ஒப்படைக்கப்பட்ட, சரணடைந்த மனித உயிர்களுக்கு என்ன நடந்தது? அதுவும் நாட்டுக்குள்ளே மற்றுமொரு தேசிய இனமாகிய தமிழ் உயிர்களுக்கு என்ன நடந்தது? இது பொறுப்புக் கூறுவதற்கும், விடை தேடுவதற்கும் எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும், காலைச் சுற்றிய பாம்பு போல துரத்திக் கொண்டிருக்கும் பிரச்சினை. எக்காலத்துக்கும் எரிந்து கொண்டிருக்கப் போகும் பிரச்சினை. ஆகவே இந்தப் பிரச்சினையின் உலக அரசியல் பெறுமானத்தையும் சர்வதேச சட்டங்கள், சமவாயங்களின் தாக்கத்தையும் உணர்ந்தே வைத்திருக்கும் அரசு, போராட்டங்களை எப்படி நீர்த்துப் போகச் செய்யலாம் என்பது பற்றியே அதிகம் யோசிக்கும். ஆனால், தமிழ் அரசியல் தலைமைகள் இத்தகைய ஒருதுருப்புச் சீட்டை சரியாக பற்றிப் பிடித்துக் கொண்டு போராடினார்களா? முதுமையால் இறந்து கொண்டிருக்கும் சாட்சிகளை ஆவணப்படுத்தும் ஒருதேசமாக சிந்திக்கும் செயல்முனைப்புகளில் ஈடுபட்டார்களா? குறைந்தபட்சம்



தன்முனைப்போடு போராடிக் கொண்டிருக்கும் அந்த மக்கள் கூடவாவது நின்றார்களா? இல்லை.

மரக்கிளை விழுந்து சேதமடைந்திருக்கும் அந்த போராட்டப் பந்தலைசீர் செய்து கொடுத்து,'நாங்கள் உங்கள் கூடவே இருக்கிறோம். தைரியமாகப் போராடுங்கள். நீங்கள் தனித்து விடப்படவில்லை.' என்கிற ஆத்மார்த்தமான உணர்வை அந்தத் தாய்மார்களுக்கு கொடுத்திருக்க வேண்டுமா, இல்லையா? தொடரும் காத்திருப்பு ஏக்கங்கள் தவிப்புகளால் உடைந்து சலித்துப் போயிருக்கும் அவர்களுக்கு நம்பிக்கை கொடுத்து, அவர்களின் மனசுகளை ஆசுவாசப்படுத்தி தாங்கிப் பிடித்திருக்க வேண்டியது இந்தச் சமூகத்தின் கடமையல்லவா? ஆனால், அப்படி ஒன்றும் நடந்ததாக தெரியவில்லை.

தமிழ் அரசியல் கட்சிகள் இளைஞர் அணி, மகளிர் அணி என்று கூறிக் கொண்டு கட்சிக் கூட்டங்களையும், மாநாடுகளையும் நடத்துகின்றன. எங்கே காணாமல் போயின இந்த அணிகள் எல்லாம்? போராடும் தாய்மார்களுக்கு ஒரு மாலை நேரத் தேநீரை ஒரு விளையாட்டு கழகமோ, யாராவது ஒரு இளைஞர் குழுவோ தயாரித்துக் கொடுக்கலாம். மூன்று வேளை உணவுகளில் ஒரு நேர உணவை யாவது கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் சங்கம் இப்படி ஏதாவது சில சிவில்சமூக குழுக்கள், அமைப்புகள் பொறுப்பேற்கலாம். மக்கள் பங்கேற்பு அரசியல், மக்கள் பங்களிப்பு போராட்டம்என்பதெல்லாம் இப்படியான வடிவங்கள் தான். இதைச் செய்வதை தவிர்த்து விட்டு, நான் சமூக அக்கறை கொண்ட இளைஞர் அணி செயற்பாட்டாளர் அல்லது ஊர்ப்பெரியவர் என்று கூறிக் கொண்டு உள்ளூராட்சி, மாகாணசபை தேர்தல்களில் கட்சிகளிடம் போய் வேட்பாளர் சந்தர்ப்பம்கேட்டு காத்து நிற்பதற்குப் பெயர் சமூக சேவை அல்ல.

பெருந்திரள் மக்கள் பார்வையாளர்களாக விடுப்பு பார்த்துக் கடந்து போவதாலோ, அல்லது தமிழ் அரசியல் தலைமைகள் அரசோடு உடன்பாட்டுக்குப் போவதாலோ தமிழ் மக்களுக்கு என்று எதுவும் பெரிதாக கிடைத்து விடப்போவதில்லை. ஒவ்வொரு பிரச்சினைகளையும் முன்வைத்து கூர்மையான விதத்தில் போராடினால் மட்டுமே அடைய வேண்டியதை அடையலாம். இன விடுதலை என்பது உடன்பாடுகளுக்குப் போவதல்ல, அது தமிழ் மக்களின் நலன்களை அபிலாசைகளை வைத்துக் கொண்டு போராடுவதும், போராட்டம் தரும் விளைவுகளை கொண்டு ஒருதேசமாக பேரம் பேசுவதும் ஆகும். அப்படியாயின் தமிழ் மக்கள் தமது பேரம் பேசும்சக்தியை அதிகரிக்க வேண்டுமாயின், கூர்மையான விதத்தில் போராடினால் மாத்திரமே அது சாத்தியமாகும். ஆகவே விடுப்பு பார்க்கும் பெருந்திரள்மக்கள் சிறுத்துப் போக, போராடிக் கொண்டிருக்கும் சிறுதிரள் மக்கள் பெருக்கமடைய வேண்டும். அதற்கு போராட்டங்களை மக்கள் மயப்படுத்த வேண்டும்.

ஒவ்வொரு சம்பவங்களுக்கும், பிரச்சினைகளுக்கும் பின்னால் உள்ள அரசியல் காரணங்களை மக்களுக்கு தெளிவூட்டும் அரசியல் கலந்துரையாடல்களை கிராமங்கள் தோறும் நடத்த வேண்டும். அவர்கள் உழைத்து உண்ணும் 'ஒரு பிடி அரிசியில் இருக்கும் அரசியலிருந்து' பேசத் தொடங்க வேண்டும். உணவு அரசியல், உடை அரசியல், நீர் அரசியல், சுற்றுச்சூழல் அரசியல், உன்னைச் சுற்றி இருக்கும் உன் கிராமத்தின் இயற்கை வளங்களின் அரசியல், உன் பிள்ளைகளின் கல்வி அரசியல், தொழில் அரசியல், மருத்துவம், சுகாதாரம், மின்சாரம், போக்குவரத்து இப்படி மக்களின் நாளாந்த சீவியம், நடமாட்டம், அத்தியாவசிய தேவைகள் ஒவ்வொன்றிலும் உள்ள அரசியலை பேசப் பழக்க வேண்டும். பேசிப் பேசி விளக்க வேண்டும். இதனை யாரால் செய்ய முடியும் என்றால், 'ஒரு தேசமாக சிந்திக்கும்' தமிழ் அரசியல் கட்சி ஒன்றின் தலைவரால் மட்டுமே இதனை சாத்தியமாக்க முடியும்.

அரசியல் கட்சிகள் தேர்தல் மையசிந்தனைக்குள் நின்று கொண்டு மரத்துப் போயிருக்கும் மக்களை மந்தைகளாக தொடர்ந்தும் ஓட்டப் போகின்றனவா? இல்லை, வெறும் வாக்களிக்கும் ஜட இயந்திரங்களாக மட்டுமே கருதப் போகின்றனவா? இதற்கும் அப்பால், மக்களை அரசியல் மயப்படுத்தி ஒரு தேசமாக சிந்திக்கத் தேவையான அத்தனை வனப்புகளையும் உள்ளடக்கி புத்திபூர்வமாக ஒரு சமூகத்தை கட்டமைக்கப் போகிறார்களா? இதில் எது நடக்கும்? எது நடந்தால் தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கும்? தமிழ் மக்கள் அவரவர் தொகுதிகளின் அரசியல் பிரதிநிதிகளின் நடத்தைகளில் இருந்தே, தம்மைத் தமது பிரதிநிதிகள் என்னவாக நினைக்கிறார்கள்: மந்தைகளாகவா, மனிதர்களாகவா, தம்மை இதில் எதுவாக விளங்கி வைத்திருக்கிறார்கள்என்பதனை துலக்கமாக அறிந்து கொள்ள முடியும் இதுவும் கூட, அரசியலில் ஒரு ஆரம்ப பாடம் தான். இப்படி பாடங்களைக் கற்றுக் கொண்டுவிட்டால், அரசியலில் தமிழ் மக்கள் மேய்ப்பர்களாக மாற முடியும். போராடிக் கொண்டிருக்கும் சிறுதிரள் மக்கள் பெருந்திரள் மக்களாக மாற வேண்டும். அத்தோடு நின்று விடாமல், அந்த பெருந்திரள் மக்கள் தமிழ் அரசியலில் மேய்ப்பர்களாக வளர்ச்சியடைய வேண்டும்.

நன்றி: நிமிர்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டு.இ.கி.மி. இராமகிருஸ்ண ஆலயத் திறப்புவிழாவில்..



கல்முனை மாநகர சபையில் 73வது சுதந்திர தின விழாவின் போது



கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் யோகாசனப் பயிற்சியின் போது...



7ஆம் கொலனி ஆலயத் திற்கு தவிசாளர் ஜெயசிறில் உதவும் போது...



திருக் கோவில் பிரிவில் பட்டதாரி நியமனம் கையளிக் கையில்.

அரசியல் பத்தித் தொடர்:– 03

# சொல்லவும் வேணும்! சொல்லவும் போடா!!



**2008 ஆம்** ஆண்டு நடைபெற்ற கிழக்கு மாகாண சபைக்கான முதலாவது தேர்தலின் போது நடந்த விடயங்களைக் குறிப்பிட்டிருந்தேன்.

2008ல் பிள்ளையானை முதலமைச்சராகக் கொண்டு அமைந்த மாகாண அரசு அதன் முழுப் பதவிக்காலமும் முடிவடைவதற்கு ஒரு வருடம் முன்னரே முதலமைச்சரின் ஒப்புதலுடன் 2012ல் கலைக்கப்பட்டது. கிழக்கு மாகாண சபைக்கான இரண்டாவது தேர்தல் 08.09.2012 இல் நடைபெற்றது.

இதற்கு முந்திய 2008 தேர்தலில் அதாவது கிழக்கு மாகாண சபைக்கான முதலாவது தேர்தலில் பிரிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிட மாட்டோமென்று கொள்கைச் சூளுரைத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதற்கு மாறாக 2012 ஆம் ஆண்டுத் தேர்தலில் போட்டியிட்டது.

2012 செப்டம்பர் 08ஆம் தேதி நடைபெற்ற கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் கட்சிகள் பெற்ற ஆசனங்கள் வருமாறு.

| | |
|---|---|
| ஐ.ம.சுதந்திரக் கூட்டமைப்பு | UPFA14 |
| தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு | TNA 11 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | SLMC07 |
| ஐக்கிய தேசியக் கட்சி | UNP04 |
| தேசிய சுதந்திர முன்னணி | NFF01 |
| மொத்தம் | 37 |

கிழக்கு மாகாணசபையில் தனிக்கட்சியொன்று ஆட்சியமைப்பதாக இருந்தால் மொத்தம் 37 ஆசனங்களில் ஆகக்குறைந்தது 19 ஆசனங்களைப் பெறவேண்டும். இது நடைமுறையில் எந்தக் கட்சிக்கும் சாத்தியமில்லையென்பது ஒரு சாதாரண அரசியல் மாணவனுக்கும் தெரிந்த விடயம். 2012 செப்டம்பர் 08ஆம் தேதி நடைபெற்ற கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் 14 ஆசனங்களைப் பெற்ற UPFA (ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு) உடன் சேர்ந்து ஆட்சியமைக்க வரும்படி 11 ஆசனங்களைப் பெற்றிருந்த TNA(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) க்கு அப்போதிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவர்கள் அழைப்பு விடுத்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அவர்களின் பச்சை விளக்குச் சமிக்ஞைக்காகப் பல நாள் காத்திருந்து விட்டுத்தான் UPFA உடன் உடன்பாட்டிற்கு வந்து கிழக்கு மாகாணசபையின் ஆட்சிக் காலத்தின் முதல் இரண்டரை வருடங்களுக்கு UPFA ஐச் சேர்ந்த நஜீப் மஜீத் முதலமைச்சரானார். இக்காலகட்டத்தில் கையில் வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைவதைப் போல் TNA SLMC (ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்) உடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக் காலத்தை வீணாக்கியது.

TNA இன் 11 ஆசனங்களும் SLMC இன் 07 ஆசனங்களுடன் சேர்ந்தாலும் கூட ஆட்சியமைக்கப் போதாது [(11+07=18〈19).UNP இன் 04 ஆசனங்களும் சேர்ந்தால்தான் ஆட்சியமைக்க முடியும். (11+07+04=22〉19) மத்தியில் அதிகாரத்தில் உள்ள UPFA உடன் சேர்ந்து கிழக்கு மாகாணசபையில் ஆட்சி அமைப்பதிலா? அல்லது மத்தியில் எதிர்க் கட்சியாக உள்ள UNP உடன் சேர்ந்து ஆட்சி அமைப்பதிலா? நன்மைகளுண்டு என்று கேட்டால் ஒரு சிறுவன் கூட UPFA உடன் சேர்ந்து மாகாணசபை ஆட்சியமைப்பதுதான் நன்மை என்று கூறுவான். இது கூடத் தெரியாமல் SLMC உடன்TNA பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது. SLMC ஐப் பொறுத்தவரை மத்தியில் ஆட்சி அதிகாரத்தில் உள்ள UPFA அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளையும் வைத்துக்கொண்டிருந்த அவர்கள், மத்தியில் எதிர்க்கட்சியாக உள்ள TNA உடனும் UNP உடனும் சேர்ந்து மாகாணசபையில் ஆட்சி அமைக்க வரமாட்டார்கள் என்று தெரிந்தும் கூட அவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது TNA இன் வழமையான அரசியல் முட்டாள்தனமாகும்.

SLMC ஆனது TNA உடன் ஒரு புறம் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது போல் போக்குக்காட்டிக் கொண்டே மறுபுறம் UPFA உடன் உடன்பாட்டிற்கு வந்தது. அரசியல் காய்களை நகர்த்திய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஆட்சியதிகாரத்தில் பங்கேற்றது. அதில் தவறில்லை. அது அவர்களுடைய அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களின் நலன் சார்ந்த அரசியல் தந்திரோபாயம். TNA ஆனது இறுதியில் SLMC தங்களை ஏமாற்றி விட்டதாக அழுது வடிந்ததுதான் மிச்சம்.

மேலும், தமிழ் மக்களைப் பொறுத்தவரை UNP என்றாலும் சரி அல்லது SLMCஎன்றாலும் சரி அல்லது UPFA என்றாலும் சரி எல்லாமே குணாம்சம் அளவில் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே. பேரினவாதக் கட்சிகளிலொன்றான அதிலும் மத்தியில் எதிர்க்கட்சியாகவுமுள்ள UNP உடன் சேர்ந்து ஆட்சியமைப்பதற்கு TNA முன் வர முடியுமானால் இன்னொரு பேரினவாதக் கட்சியான அதேவேளை மத்தியில் ஆட்சியிலுள்ள UPFA உடன் சேர்ந்து ஆட்சியமைப்பதில் TNA ற்கு இருந்த தடை என்ன? TNA ஆனது UNP இற்குத் தேவையான அரசியலைச் செய்கிறதே தவிர தமிழ் மக்களுக்குத் தேவையான அரசியலைச் செய்யவில்லை என்பதற்கு இதுவும் ஓர் உதாரணம்.

இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சாதித்தது (?) என்னவென்றால் பிள்ளையான் மீண்டும் முதலமைச்சராக வருவதைத் தடுத்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிள்ளையானைப் பழிதீர்த்துக் கொண்டது மட்டுமே.


தேர்தலுக்கு முன்னரும் தேர்தல் காலத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (தமிழரசுக் கட்சி) இத் தேர்தலில் கிழக்கு மாகாணசபை ஆட்சியைக் கைப்பற்றுவோமென தமிழர்களுக்கு நம்பிக்கை ஊட்டியது. தேர்தல் முடிவுகள் வெளிவந்ததும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து முதலமைச்சர் பதவியையும் அவர்களுக்கு கொடுப்பதற்குச் சம்மதித்து வடக்குக் கிழக்கை இணைப்போம் என்றது. இரண்டுமே நடைபெறவில்லை.

கிழக்குத் தமிழர்களுக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை பிள்ளையானுக்குச் சகுனப்பிழையை ஏற்படுத்து என்று புலம்பெயர் தமிழ்ச் சமூகம் இட்ட கட்டளையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செவ்வனே நிறைவேற்றியது. தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் அரசியல் செயற்பாடுகள் அத்தனையுடனும் இப்பத்தி எழுத்தாளருக்கு உடன்பாடில்லை. அது வேறு விடயம். ஆனால், பிள்ளையானைப் பழிவாங்கியதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கிழக்கு மாகாணத் தமிழர்களுக்கு பெற்றுக்கொடுத்த நன்மைகள் என்ன என்பதே கேள்வி. இப்பத்தி எழுத்தாளரின் பார்வையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரண்டு விதத்தில் அரசியல் தந்திரோபாயத்துடன் செயற்பட்டிருக்கலாம். அதுபற்றி அடுத்தவாரம் பார்க்கலாம்.

தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயரத்தில் துரைவந்தியமேடு










**இவ்வாரம் தொடக்கம் எமது பிதேசத்திலுள்ள பின்தங்கிய கிராமங்களின் வரலாறு மற்றும் அங்குள்ள தேவைகள் தொடர்பாக பதியுலா எனும் மகுடத்தின் கீழ் மின்னிதழின் இணைஆசிரியர் புவிநேசராசா கேதீஸ் தரவிருக்கிறார். அந்தவகையில் இவ்வாரம் துரைவந்தியமேடு தொடர்பான கட்டுரை வெளியிடப்படுகிறது.**

**ஆர்.**

**கல்முனை** வடக்கு பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட பழமைவாய்ந்த தமிழ் கிராமங்களில் ஒன்றான துரைவந்திய மேடு கிராமம் இயற்கை எழிலும் பசுமையும் நிறைந்த சுற்றவர நீரினால் சூழப்பட்ட விவசாயக்கிராமமாகும்.

இயற்கை வனப்புடன் நீரினால் சூழப்பட்டு தீவாக காட்சியளிக்கும் துரைவந்திய மேடு கிராமத்தின் அழகு வெளியில் தெரிவதும் பேசப்படும் அளவுக்கு அதன் அடிப்படைத் தேவைகள் அவலங்கள் வெளிவருகின்றமை குறைவென்றே கூறலாம்.

இலங்கையை வெளிநாட்டவர்கள் ஆட்சி செய்த காலத்தில் அதிகாரிகள் துரை என அழைக்கப்பட்டவர்கள் வந்து இறங்கிய மேடு என்பதால் இக்கிராமத்திற்கு துரைவந்து இறங்கிய மேடு எனபெயர் உருவாகியதாக கூறப்படுகின்றது அப்பெயர் பின்னாளில் மருவி துரைவந்தியமேடு என அழைக்கப்படுகின்றது.

இக்கிராமத்திற்கு வடக்கு பக்கமாக துறைநீலாவணை கிராமத்திற்கான ஒற்றை வழிப்பாதையும் தெற்கு பக்கமாக சேனைக்குடியிருப்பு கிராமத்திற்கான ஒற்றைவழிப்பாதையுமே உள்ளன.

மழை காலங்களில் வருடாவருடம் கிட்டங்கி ஆற்றின் நீர்மட்டம் அதிகரித்து கிராமத்தை நீர் சூழ்வதுடன் இரண்டு பக்கங்களிலும் காணப்படும் கிராமத்தின் பிரதான வீதிகளின் மேலாக நீர் பரவி தரைவழிப்போக்குவரத்து முற்றாக தடைப்படுகின்றது.

மாரி காலங்களில் மக்கள் அத்தியாவசிய தேவைகளுக்காகவோ வைத்தியசாலைகளுக்கு அவசரத் தேவைகளுக்காகவோ கிராமத்தில் இருந்து வெளியில் செல்ல முடியாது பெரும் அசளகரியங்களை எதிர் நோக்குகிவருகின்றனர்.

கர்ப்பிணிப்பெண்களும் அவசர சிகிச்சைக்காக வைத்திய சாலைக்கு செல்ல வேண்டியவர்களும் தோணிகளில் மிகவும் ஆபத்தான பயணத்தை மேற்கொண்டே செல்ல வேண்டிய துர்ப்பார்க்கிய நிலையே காணப்படுகின்றது.

இந்த கிராமத்திற்கான பிரதான பாதை உரிய முறையில் சிறந்த திட்டமிடலுடன் மதகுகள் அமைத்து மழை காலத்தில் வெள்ளத்தால் போக்குவரத்து தடைப்படாத வகையில் அமைக்கப்பட்டு இக்கிராமத்தின் பிரதான தேவையை நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதே இக்கிராம மக்களின் நீண்ட கால அவாவாகும்.

நெற்செய்கை வீட்டுத்தோட்டம் மீன்பிடி கால் நடை வளர்ப்பு ஆகிய தொழில்களை பிரதானமாக கொண்டுள்ள இக்கிராமத்தில் 65 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். இங்கு ஒரு பிள்ளையார் ஆலயமும் ஐந்தாம் ஆண்டுவரை வகுப்புக்களை உடைய துரைவந்திய மேடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையும் உள்ளன.

துரைவந்தியமேடு கிராமத்தின் பிரதான வீதிகள் மாத்திரமல்ல கிராமத்தில் உள்ள பல உள்வீதிகள் புனரமைக்கப்படாமல் உள்ளதுடன் அமைக்கப்பட்ட வீதிகளும் உடைந்து பள்ளமும் குழியுமாக உள்ளன காலத்திற்கு காலம் அரசியல்வாதிகள் வாக்குறுதிகளை மட்டும் தந்து செல்கின்றார்கள் எதற்கும் நிரந்தர தீர்வில்லை என்ற ஆதங்கத்தை ஆலய தலைவர் பி.மாணிக்கவாசகம் தெரிவித்தார். தொடர்கதையாக காணப்படும் துரைவந்தியமேடு கிராமத்தின் அவலத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க உரிய அதிகாரிகள் அரசியல்வாதிகள் சிறந்த திட்டமிடலை செய்து நிரந்தர தீர்வைக் காண வேண்டும் என்பதே இந்த மக்களின் கோரிக்கையாகும்.

**அடுத்த வாரம் இன்னுமொரு கிராமத்தில் பேசுவோம்.......**

---

## கதையில் இருந்தது நாம் கற்று கொள்ளும் பாடங்கள்..

ஒரு ஜாடி முழுவதும் தானியம் நிரப்பி அதன் மேல் ஒரு எலியை விட்டார்கள்.

எலிக்கு தன்னை சுத்தி இவ்வளவு

உணவு இருக்கிறது என்று பயங்கர குஷி.

இனி உணவை தேடி ஓடாமல் சந்தோஷமாய் வாழ்க்கையை கழிக்கலாம் என்று எண்ணி தினமும் தன்னை சுத்தி ஜாடியில் உள்ள தானியத்தை உண்டது.

நாளாக நாளாக ஜாடியில் உள்ள தானியம் குறைந்து கொண்டே போய் ஒரு நாள் தீர்ந்தே விட்டது.

எலி இப்பொழுது ஜாடிக்குள் நிரந்தரமாய் மாட்டிக் கொண்டு விட்டது. அதனால் வெளியேறவே முடியாது.

இனி தினம் யாராவது தானியம் போட்டால் மட்டுமே அதற்க்கு உணவு. யாரும் போடவில்லை என்றால் பட்டினியால் சாக வேண்டியதுதான்.

அப்படியே யாரவது போட்டாலும் போடுவதை மட்டுமே சாப்பிட முடியும். விரும்பியதை, வேண்டும் என்பதை சாப்பிட முடியாது.

இந்த கதையில் இருந்தது நாம் கற்று கொள்ள வேண்டிய பாடங்கள்..

(1) குறுகிய கால இன்பங்கள் என்றும் நிரந்தரம் அல்ல.

அவை நம்மை அழிவு பாதைக்கே கொண்டு செல்லும். அவை நீண்ட கால பொறிகளுக்கு வழிவகுத்து நம்மை நிரந்தரமாக சிக்க வைத்து விடும்.

(2) சுலபமாக கிடைக்கும் எதுவும் நம்மை அதற்கு அடிமை ஆக்கி, அதற்கு சொகுசாய் நம்மை வாழ பழக்கி, நம் முன்னேற்றத்தை தடுத்து நம் வாழ்வை நாசமாக்கி விடும்.

(3) நமக்கு தெரிந்த ஒரு கலையை நாம் உபயோகிக்காமல் சோம்பேறி ஆனால், அந்த கலையை நாம் இழக்க நேரிடும்.

(4) சரியான நேரத்தில் சரியான செயல்களை செய்யாமல் விட்டால், நம் வாழ்க்கையையே இழக்க நேரிடும். நாம் நம் மனதுக்கு பிடித்ததை தேர்ந்தெடுக்க முடியாத நிலைக்கு கட்டாயமாக தள்ளப்படுவோம்...!!



**சிறுவர் சிறுமியருக்கு..**
**தங்களின் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. தரம் கண்டு இப்பகுதியில் பிரசுரிக்கப்படும்**



விரிவான செய்திகளை விரைவாக தெரிந்து கொள்ள
www.kalmunainet.com




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்முனை NET e paper
kalmunainet.com





# மீண்டும் வரலாற்று எழுச்சி பெற்ற தமிழர் தேசம்

**வடக்கு** கிழக்கில் நீண்டகாலத்திற்குப்பிறகு இருமாகாணங்களையும் இணைத்த வரலாற்றுமுக்கியத்துவம் வாய்ந்த ஒரு பேரணி இவ்வாரம் நடைபெற்றது. இதனால் தமிழர்தேசம் மீண்டுமொருதடவை புத்தெழுச்சி பெற்றுள்ளது எனலாம்.குறிப்பாக அம்பாறையில் அன்று தந்தைசெல்வா அமிர்தலிங்கம் உள்ளிட்ட தமிழ்த்தலைவர்கள் உணர்வுபூர்வமாக மேற்கொள்ளப்பட்ட பாரிய பேரணியின்பின்னர் இவ்வாரம்தான் அத்தகையதொரு பேரணி இடம்பெற்றது என்று கூறலாம்.

அம்பாறையில் புதனன்று ஆரம்பிக்கப்பட்ட இந் நான்குநாள் பேரணியின் முதல்நாள் வெளிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் இரா.சாணக்கியன் ஜனா ஆகியோரது பிரசன்னம் என்பது வரலாறாகிவிட்டது. அவர்களது பங்கேற்பு அம்பாறை மாவட்ட அரசியல் சமூக சமய பிரதிநிதிகளுக்கு மிகுந்த நம்பிக்கையுடன்கூடிய உற்சாகத்தைக்கொடுத்தது என்றால் மிகைப்பட்டதல்ல. ஏனெனில் அதற்குமுன்பாக நீதிமன்றத்தினால் 32பிரமுகர்களுக்கு விநியோகிக்கப்பட்ட தடையுத்தரவு பலரது மனங்களிலும் ஒருவித சந்தேகத்தை எழுப்பியிருந்தது.

இதில் உள்ள விசேசம் என்னவென்றால் தமிழ் பேசும் மக்கள் என்று சொல்லப்படும் இரு சமுகமும் ஆங்காங்கே இணைந்துகொண்டதுதான்.

ஆம் வடக்கு கிழக்கு சிவில் அமைப்புகள் ஏற்பாடு செய்த பொத்துவில்பொலிகண்டி பேரணி திட்டமிட்டபடி கடந்த புதன்கிழமை காலை கொட்டும் மழைக்கு மத்தியில் ஆரம்பமானது.

பொத்துவில் தொடக்கம் அக்கரைப்பற்று வரை இடையிடையே விசேட அதிரடிப்படை மற்றும் பொலிசாரின் தடைகள் மறிப்புகள் இருந்தன. அத்தனை தடைகளைத்தாண்டி இப்பேரணி நடைபெற்றது.பொத்துவில் தொடக்கம் திருக்கோவில் வரையான பிரதேசத்தில் கனமழை ஊற்றியபொழுதிலும் அனைவரும் நனைந்தவண்ணம் பேரணியில் பங்கேற்றனர்.

த.தே.கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் இரா.சாணக்கியன் கோ. கருணாகரன் த.கலையரசன் காரைதீவு பிரதேசசபைத்தவிசாளர் கி.ஜெயசிறில் கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் யாழ்.மாகாணசபைஉறுப்பினர் சட்டத்தரணி சுகாஷ் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜி.சிறிநேசன் சீ.லோகேஸ்வரன் பா.அரியநேத்திரன் மற்றும் சமயத்தலைவர்கள் சிவில் தலைவர்கள் சமுகசெயற்பாட்டளர்கள் உள்ளிட்ட பலர் ஆரம்பத்தில் கலந்துகொண்டனர். தொடர்ந்து வடக்கு கிழக்கு பிரதேசத்தைச்சேர்ந்த பல தமிழ்முஸ்லிம் அரசிய்வாதிகள் சமுகசெயற்பாட்டாளர்கள் தாமாக வந்து கலந்துகொண்டு தமது ஆதரவைத்தெரிவித்தனர்.

வடக்கு மற்றும் கிழக்கில் நடைபெறும் பௌத்தமயமாக்கல் நிலங்கள் அபகரிப்பு கொரோனாவினால் மரணமடையும் முஸ்லிம்களின் உடல்கள் தகனம் செய்வதற்கு எதிர்ப்பு தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்தல் காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் மலையக மக்களின் ஆயிரம் ரூபாய் சம்பளப் பிரச்சினை அடங்கலாக அரச அடக்குமுறைகள் போன்ற விடயங்களை முன்னிறுத்தி அவற்றை கண்டித்தும் நீதி கோரியும் தீர்வு கேட்டும் இந்த போராட்டம் திட்டமிடப்பட்டு நடைபெற்றது. இதன்போது எங்கே எங்கே உறவுகள் எங்கே? எரிக்காதே எரிக்காதே ஜனாசாக்களை எரிக்காதே! எங்கள் நிலம் எமக்கு வேண்டும்! வேண்டும் வேண்டும் நீதி வேண்டும்! வேண்டும் வேண்டும் உரிமை வேண்டும்! திரும்பிப் பார் திரும்பிப் பார் சர்வதேசமே திரும்பிப் பார்! வடக்கு கிழக்கு தமிழர்களின் தாயகம்! ஐ.நா சபையே தலையிடு வழங்கு வழங்கு ஆயிரம் ரூபா சம்பள உயர்வை வழங்கு போன்ற முழக்கங்களை பேரணியில் பங்கேற்றுள்ள தமிழ் பேசும் மக்கள் ஒன்றாக ஓங்கி ஒலித்து வருகின்றனர்.





பொலிஸ் பொறுப்பதிகாரிகள் மற்றும் விசேட அதிரடிப்படையினர் நீதிமன்ற தடையுத்தரவினை காண்பித்து ஆர்ப்பாட்ட பேரணியை தடுத்து நிறுத்தி கலைந்து செல்லுமாறு கேட்டுக்கொண்டபோது அத்தனையும் மீறி போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டமை கலந்துகொண்டவர்களுக்கு உறசாகத்தைக் கொடுத்தது.

பொத்துவிலில் இருந்து தாழங்குடா வரையில் சுமார் 100 கிலோமீற்றர் பயணம் மேற்கொண்டு மட்டக்களப்பினை வந்தடைந்த குறித்த முதல்நநாள போராட்டத்திற்கு அட்டாளைச் சேனை தொடக்கம் ஆங்காங்கே முஸ்லிம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.எ.நசீர் எம்.ரி.ஹசன்அலி கல்முனைமாநகரசபை உறுப்பினர் மனாப் உள்ளிட்ட பிரதிநிதிகளும் முஸ்லிம் மக்களும் இணைந்து வலுச்சேர்த்தனர். அதற்கு ஒருசிலர் முகநூலில் வசைபாடியதையும் காணக்கூடியதாயிருந்தது.

இலங்கை அரசாங்கத்தினால் சிறுபான்மை சமூகங்களுக்கு எதிராக தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவரும் அடக்குமுறைகள் வடக்கு கிழக்கின் நில அபகரிப்புக்கள் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையினை வலியுறுத்தி இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அத்தோடு அனைத்து விதமான மனித உரிமை மீறல் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலும் சர்வதேசத்தின் கவனத்தினை ஈர்க்கும் முகமாகவும் அகிம்சை முறையில் இந்த கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

தந்தை செல்வநாயகம் காலத்தில் தமிழ் மக்களும் முஸ்லீம் மக்களும் ஒன்றுபட்டு ஒற்றுமையுடனேயே வாழ்ந்தார்கள். இ.த.கட்சியில் முஸ்லிம் உறுப்பினர்களே அம்பாறையில் பாராளுமன்ற உறுப்பினர்களாக வந்தனர். அதாவது தமிழ்மக்கள் முஸ்லிம்பிரமுகர்களுக்கு வாக்களித்து பாராளுமன்றம் அனுப்பியதே வரலாறு. எனினும் சிறிலங்கா பேரினவாத அரசு திட்டமிட்டு முஸ்லீம்களையும் தமிழர்களையும் பிரித்து மோத விடுவதற்காக முஸ்லீம் ஊர்காவல் படைகளை தமிழ் மக்கள் மீது மோத விட்ட சம்பவங்களால் தமிழ் முஸ்லீம் உறவு கடந்த 30வருடங்களுக்கு மேலாக சிதைந்து போய் இருந்தது. ஒருவர் மீது ஒருவர் சந்தேக கண்கொண்டு பார்க்கும் அவல நிலை காணப்பட்டது.

இன்று தமிழரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன்இ சாணக்கியன் ஆகியோர் எடுத்த முயற்சியின் பலனாக தமிழ் முஸ்லீம் உறவு மீண்டும் ஏற்பட்டிருக்கிறது. பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான எழுச்சி ஊர்வலத்தில் முஸ்லீம் மக்கள் பெருமளவில் கலந்து கொண்டு அவர்களும் தமது நேசக்கரத்தை நீட்டியிருக்கிறார்கள்.

இந்த உறவும் நேசமும் நிலைக்க வேண்டும் நீடிக்க வேண்டும். வடக்கு கிழக்கில் தமிழ் முஸ்லீம் மக்கள் இணைந்தால் சிங்கள பேரினவாதிகளின் ஆக்கிரமிப்புக்கு முடிவு கட்ட முடியும் என்று பேரணியில் கலந்து கொண்ட பலரும் கருத்துரைத்தனர்.

2ஆவது நாள் பேரணி மட்டக்களப்பு தாளங்குடாவிலிருந்து ஆரம்பித்து ஆரையம்பதி காத்தான்குடி மட்டக்களப்பு ஏறாவூர் செங்கலடி வாழைச்சேனை வழியாக ஓட்டமாவடி நகர எல்லைக்குள் நுழைந்த போது முன்னாள் இராஜாங்க அமைச்சரும் அகில இலங்கை மக்கள் காங்கிரசின் தவிசாளருமாகிய எம்.எஸ். எஸ்.அமீர் அலி தலைமையில் பெருமளவான முஸ்லிம் மக்களும் இணைந்து கொண்டிருந்தனர்.

தமிழ் முஸ்லிம் உறவை மீண்டும் வலுப்படுத்த இப்பேரணி பிள்ளையார்சுழியாகும் என அமீர்அலி அங்கு தெரிவித்தார். பேரினவாதத்தை எதிர்கொள்ள சிறுபான்மையினர் ஒன்றுபட்ட செய்தி இது என சுமந்திரன் கூறியுள்ளார்.திருமலையை நெருங்கியதும் வெருகலில் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எஸ்.கஜேந்திரன் திருமலைநகரில் இரா.சம்பந்தனும் கலந்துகொண்டனர்.

3ஆம்நாள் முல்லைத்தீவை முடக்கிய பயணத்தின் போது தாக்குத் சம்பவமொன்று திருமலையில் இடம் பெற்றதாகக்கூறப்படுகிறது. இதுபற்றி தாக்குதலுக்கிலக்கான முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவிக்கையில்

திருகோணமலை மடத்தடி சந்தியிலேயே வைத்து நானும் அனந்திசசிதரனும் பயணம் செய்துகொண்டிருந்த வாகனத்தின் மீது காடையர்களால் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு கண்ணாடிகள் உடைத்தெறியப்பட்டுள்ளன.

அவர்களுடைய கைகளிலே பெட்ரோல் நிரப்பிய போத்தல்கள் காணப்பட்டன.பொலிஸார் பக்கத்திலே நிற்கின்ற போதுதான் இந்த தாக்குதல் இடம்பெற்றது. விழவிழ எழுவோம் வீறுகொண்டு எழுவோம் என்ற அடிப்படையிலே நாங்கள் இந்த பயணத்தை நிச்சயமாக தொடர்வோம். இனவெறி மதவெறி தாக்குதல்களிற்கு நாங்கள் ஒருபோதும் அஞ்சமாட்டோம்.என்றார். வாகனதொடரணிக்கு ஆணிவைத்ததாகவும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

மொத்தத்தில் இப்பேரணி ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவை அமர்வு ஆரம்பமாகவிருக்கின்ற இத்தருணத்தில் இடம்பெற்றுள்ளமை சிறுபான்மைதரப்பிற்கு சாதகமாக அமையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


**சகா**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிட்19 புரிதல்கள்,வைரஸ் பரவாமல் தடுப்பதற்கான வழிமுறைகள்,பயம் மற்றும் மன அழுத்தத்திற்கு ஆளாகாமல் இருப்பதை உறுதி செய்தல் போன்ற நோக்குடன் கொவிட்19 பற்றிய புரிதல்களை PAC, கல்முனை நெட் ஊடக வலையமைப்புடன் இணைந்து உருவாக்கியுள்ளது.**

**☎ 077-1717421 என்ற தொலைபேசி இணைப்பில் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளலாம்**




**உளவியல் ஆலோசனை மையம் இலங்கை**

**கல்முனை NET kalmunainet.com**




# வீட்டிலிருந்து வெளியே செல்லும் போது முகக்கவசம் அணிய வேண்டியது கட்டாயமாகும்



**கல்முனை NET kalmunainet.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org